விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 11 சனிக்கிழமை (27.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

# இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் புதிய ஆதாரங்கள்

## தம்மிடம் இருப்பதாக ஐ.நா. அறிவிப்பு



(நியூயோர்க்)

இறுதிக்கட்ட போரின் போது முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டமைக்கான புதிய ஆதாரங்கள் போதியளவு தம்மிடம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்கால் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, வெள்ள முள்ளிவாய்க்கால் கடற்கரைப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 450 கிலோக்கிராம் சி-4 ரக வெடி மருந்துமற்றும்வெடிபொருட்கள்மீட்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ளிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம் கடந்த 2-ம் திகதி இந்த வெடி மருந்து மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த பகுதியிலிருந்து சி-4 வெடி மருந்து 450 கிலோகிராம், 80 மில்லிமீற்றர் குண்டுகள் 1120, ரீ-56 ரக துப்பாக்கி ரவைகள் 5925, கிளேமோர் குண்டுகள் 25 ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன. அதேபோன்று வெள்ள முள்ளி வாய்க்கால் (19ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் விலை உயர்வு!

(கொழும்பு)

இலங்கையில் நேற்று நள்ளிரவு தொடக்கம் கோதுமை மாவின் விலை 4 ரூபாய் முதல் 6 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளதாக செரண்டிப் மற்றும் பிறிமா நிறுவன அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதன்படி செரண்டிப் நிறுவனத்தால் விநியோகம் செய்யப்படும் கோதுமை மாவின் விலை 4 ரூபாய் அதிகரிப்பாலும், பிறிமா நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் கோதுமை மாவின் விலை 6 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கடந்த ஏப்ரல் மாதமளவில் இந்த இரு நிறுவனங்களும் கோதுமை மாவின் விலையை 8 ரூபாய் 50 சதத்தால் உயர்த்தியிருந்தன.

இந்நிலையில், வியாபாரத்துறையில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, தேய்மானம், இறக்குமதியில் ஏற்படக்கூடிய இழப்புக்காரணமாகவே தாம் மீண்டும் விலையை உயர்த்தியுள்ளதாக அந்நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந-11)

## கிணற்றினுள் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றினுள் தவறி விழுந்து சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். இச்சம்பவம் நேற்று 1.30 மணியளவில் நாவாந்துறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் நாவாந்துறை காமால் வீதியை சேர்ந்த சுமந்தன் பவிசன் (வயது-4) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிறுவனின் தாய் கடைக்குச் சென்றவேளை கிணற்றடிக்குச் சென்ற சிறுவன் கிணற்று வாளியை (19ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆம் திருத்தச்சட்ட ரத்து தற்கொலைக்குச் சமனானது

### அரசை சாடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

13-ம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யும் அரசாங்கத்தின் முயற்சியானது தற்கொலைக்கு நிகரானது என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

13-ம் திருத்தச்சட்டம் இரத்து செய்யப்பட்டால் அது நாட்டுக்கு பாரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

தற்போதைய ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றோர் கோசங்களை எழுப்ப எதுவும் இல்லாத காரணத்தினால் 13-ம் திருத்த சட்டத்தை தூக்கிப்பிடித்துள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## அதிகார பகிர்வில் அரசு மாற்றம்!

(கொழும்பு)

அதிகாரப்பகிர்வு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பகிர்வு குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் சில முக்கியஸ்தர்கள் அதிகாரப் (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழிலிருந்து தென்பகுதிக்கு பாரிய இரும்புக் கடத்தல்

### மடக்கிப்பிடித்தது ஓமந்தை பொலிஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதி நோக்கிய மிப்பெரும் இரும்புக்கடத்தலொன்று ஓமந்தை பொலிஸாரினால் முறிடிக்கப்பட்டுள்ளது.

இதில் இரு லொறிகள் உட்பட சுமார் ஏழாயிரம் கிலோகிராம் நிறையுடைய 25வாகன இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்விரு லொறிகளின் சாரதிகளும் ஓமந்தை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதியன்று இரு லொறிகளில் பழுதடைந்த அல்லது மீள் சரிசெய்யக்கூடிய வாகன இயந்திரங்கள் 25 உட்பட பழுதடைந்த இரும்புப்பொருட்களுடன் தென் பகுதியினை (19ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றத்தை கண்காணிக்க ஐ.நாவின் விசேட பிரதிநிதி

### விரைவில் கொழும்பு வருகிறார்

(நியூயோர்க்)

ஐ.நா.வின் உள்ளக இடம்பெயர்ந்தோர் தொடர்பிலான விசேட பிரதிநிதி சலோகா பெயனி எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் இலங்கைக்கு வருகைதர வுள்ளார்.

'இந்த வருகைக்கான உத்தியோக அழைப்பை நேற்று நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் விடுத்துள்ளார்.

இவ் அறிவிப்புக் குறித்து ஐ.நாவின் உததியோக பூர்வ இணைத்தளம் குறிப்பிடுகையில்,

இலங்கை அரசாங்கம் இடம்பெயர்ந்துள்ள பொதுமக் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இராஜிநாமா!

## புதிதாக ராகுல் நியமிக்கப்படலாம்



இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய மத்திய அமைச்சரவையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாற்றம் ஏற்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே எஸ்.எம். கிருஷ்ணா தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தின்போது கர்நாடக மாநில சட்டப்பேரவை தேர்தலை கருத்தில் கொண்டு கட்சிப்பணிக்காக வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா அனுப்பப்படுவார் என்று கூறப்பட்டு வந்தது.

இதனை உறுதிப்படுத்தும் விதமாகவே எஸ்.எம். கிருஷ்ணா நேற்று தனது அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.



இதுபோன்று அறக்கட்டளை மோசடிச் சர்ச்சையில் சிக்கியுள்ள சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் பதவியும் பறிபோகும் நிலை காணப்படுவதாக இந்தியச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தியாவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணித்தலைவரும் சோனியா காந்தியின் புதல்வருமான ராகுல் காந்தி நியமிக்கப்படுவார் என்று காங்கிரஸ் கட்சிக்குள் கருத்துக்கள் பரிமாறப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ந-1)

# இலங்கை காவற்படையினருடன் அமெரிக்கா கூட்டுப் பயிற்சி

## மகிழ்ச்சி வெளியிடுகிறார் அமெ. தூதுவர்

இலங்கை கரையோர காவற்படையினருடன் இணைந்து பயிற்சிகளை நடத்துவதையிட்டு மகிழ்ச்சியடைவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிசேல் ஜே. சிஸன் தெரிவித்துள்ளார். திருகோணமலையில் இடம்பெற்ற ஏற்றுமதிக் கட்டுப்பாடு மற்றும் எல்லைப்பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி வைபவத்தில் உரையாற்றும் போது அமெரிக்கத் தூதுவர் மிசேல் ஜே. சிஸன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இந்த முன்முயற்சியானது கடற்பாதுகாப்பை முன்னேற்றுகின்ற இருதரப்பு செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் விருத்தி செய்யப்பட்டது.

நான்கு அமெரிக்க இராணுவ பயிற்றுவிப்பாளர்களும் இலங்கையைச் சேர்ந்த 14 கரையோர பாதுகாப்பு படை அதிகாரிகளும் 10 தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்ச்சித் திட்டமானது ஏனைய நாடுகள் தமது ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்திக்கொள்ள உதவுவதை நோக்காகக் கொண்டு அமெரிக்க அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற பிரதானமான முன் முயற்சியாகும்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், உள்நாட்டுப் பாதுகாப்பு, வர்த்தகம், சக்திவளம் மற்றும் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் நிபுணத்துவத்தின் மூலமாக உலகெங்கிலுமுள்ள நாடுகளுக்கு சட்டம், அமுலாக்கப் பயிற்சிகள் மற்றும் உபகரணங்களை இத்திட்டம் வழங்குகின்றது.

இலங்கை கரையோர காவற் படையினருடன் இணைந்து இந்த வகையான பயிற்சிகளை நடத்துவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிச் செயற்பாடுகள் 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15ஆம் திகதிஆரம்பமாகியது. இது இலங்கையில் கரையோர காவற்படையினருக்காக நடத்தப்பட்ட முதலாவது அலுவலர் பாடநெறி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-1)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## 2013-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2013-ம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் மார்கழி 31-ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 15.11.2012-ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தலைவர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 14.11.2012-ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றிற்குரிய விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில், முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய, குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 23.11.2012-ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### 2013-ம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல. | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 16,579,200.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 220,000.00 |
| 3. | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக்கடை இல.1 | 500.00 | 5,000.00 | 232,650.00 |
| 4. | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக்கடை இல.2 | 500.00 | 5,000.00 | 155,430.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 827,420.00 |
| 2. | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 660,110.00 |
| 3. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 145,750.00 |
| 4. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 413,600.00 |
| 5. | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 50,600.00 |
| 6. | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக்கடையும் | 500.00 | 5,000.00 | 116,600.00 |
| 7. | கொக்குவில் உப அலுவலக இல.329, பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 169,400.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
26.10.2012. (C-1393)

ப. வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.


"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."
ஸ்ரீவித்தியா குருகுலம்
வழங்கும், ஆசிரியர் முத்துலிங்கத்தின்
'EASY ENGLISH'
✱ உத்தியோகத்தர்க்கு ✱ ஆசிரியர்க்கு ✱ உயர்கல்வியினர்க்கு
✱ A/L படித்தவர்க்கு ✱ மகளிர்க்கு ✱ வெளிநாடு செல்பவர்க்கு (797)
குருகுல மரபு : இலவசக் கல்வி
விபரங்கள் + பெயர்பதிவு 773212711 மூலம்

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்


10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

LL.B (UK) கற்கை நெறி
யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)
புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது

✱ உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
✱ இலங்கை மற்றும் Uk பாட விதானங்களை உள்ளடக்கியது.
✱ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
✱ இலகு தவணை கொடுப்பனவு முறை.
✱ இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்.
(C-1392)
Prince City Campus
இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 0775949272

Diploma in English
ஆங்கிலம் இனிமேல் தடையில்லை
♦ இந்தக் கற்கை நெறியானது மிகக் குறுகிய காலத்துக்குள் சரளமாக ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க உங்களை தயார்ப்படுத்துகிறது.
♦ அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்.
♦ குறைந்த கட்டணம் மற்றும் இலகு தவணை கொடுப்பனவு வசதி.
♦ நவீன வகுப்பறைகள்
♦ உலகத் தரம் வாய்ந்த சான்றிதழ்

பதிவுகள் ஆரம்பம்
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(C-1391)
PRINCE CITY CAMPUS
No. 275, Clock Tower Road, Jaffna.
Tel: 021-492 3855, Hotline: 0775 949 272
Find us on Facebook www.facebook.com/pcclanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## புரிந்து கொள்ளுங்கள்

''என்ன சேர் வாழ்க்கை ஒரு நிம்மதியும் இல்லை'' என்று ஒருவர் கூறினார்.

''ஏன் அப்படி சொல்லுகிறீர்கள்.....?'' என்று மற்றவர் கேட்டார்.

''வீட்டுக்கு போனால் பிரச்சினை ... வெளியே வந்தால் பிரச்சினை... எப்படிப்பார்த்தாலும் ஏதாவது ஒரு பிரச்சினை வந்துக்கொண்டே இருக்கும்'' என்றார்.

''எப்படி சேர் நிம்மதியாக் இருக்க முடியும் மனிதன்?'' என்றார்.

இப்படித்தான் நம்மிலே பலபேர் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், இது குறித்து நிபுணர்கள் சொல்வதை பார்ப்போம்.

''ஒரு மனிதன் பிரச்சினை இன்றி வாழ்கிறான் என்றால் அவன் சந்தோசமாக இருக்கிறான் என்று அர்த்தம் இல்லை'' என்று அவர்கள் கூறுகிறார்கள்.

கஷ்டங்களை வெல்ல வேண்டும்... பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்... அதிலேதான் சந்தோசமே இருக்கிறது.

உலகிலே பிரச்சினை இல்லாத மனிதனே கிடையாது. நமக்கு ஒவ்வொரு பிரச்சினை இருந்தே தான் ஆகிறது. ஒவ்வொரு நாளும் புதிய புதிய பிரச்சினைகள் பிறந்து கொண்டே இருக்கிறது. இது ஒரு தொடர் கதையாகி விட்டது.

ஒரு பிரச்சினை ஏற்படும் போது அந்தச் சமயத்திலே அது சிரமமாகத்தான் தெரியும். இருந்தாலும் அதுவும் நல்லதற்குத்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கையிலே தடைகள் வேண்டும். சோதனைகள் வேண்டும், பிரச்சினைகள் வரவேண்டும். இவை இல்லாமல் இருந்தால் வாழ்க்கையிலே அர்த்தம், சுவை எதுவுமே கிடையாது. அதனால் நாம் பிரச்சினைகளை உற்சாகத்துடன் எதிர்கொள்ளவேண்டும்.

ஆனால் இன்று நாம் என்ன செய்கின்றோம்? பிரச்சினை என்று வந்து விட்டால்... அதை தீர்த்து வைப்பது எப்படி? என்று யோசிப்பதில்லை. அதில் இருந்து தப்பிக் கொள்வது எப்படி என்றுதான் யோசிக்கிறோம்.

ஒரு உண்மை என்ன தெரியுமா? ஒரு பிரச்சினையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு நமக்கு எவ்வளவு சக்தி தேவைப்படுகிறதோ அதேயளவு சக்திதான் பிரச்சினையைப் புரிந்துக்கொண்டு அதை வெற்றிக் கொள்ளவும் தேவைப்படுகிறது.

ஒருபிரச்சினையில் இருந்து தப்பிச் செல்வதற்கு நாம் முயற்சி செய்தால் அது நம்மை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

பிரச்சினையை நன்றாக புரிந்து கொண்டு அதைத் தீர்ப்பதற்கு நாம் முயலும்போது அது முழுமையாக விலகிப் போய் விடும்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ''புரிந்து கொள்ளுதல்'' முக்கியமான விடயமாகும். நிபுணர்கள் கூறும் முதல் வார்த்தையும் இதுவாகத்தான் இருக்கும்.

''எந்த அளவிற்கு ஒருவன் பிரச்சினையின் யதார்த்தத்தை நேர்முகமாகச் சந்திக்கிறானோ அந்த அளவிற்கு அவன் பலசாலியாக வெளிப்படுகிறான்''

தப்பி ஓட முயல்பவன் வாழ்க்கையில் சிக்கலாகிறான். பிரச்சினைக்குள் நுழைந்து முகம் கொடுத்து தெளிவடைய வேண்டும் என்று நினைப்பவன் பலம் பெறுகிறான்.

அதனாலே இனிமேல் நமக்கு ஏதாவது பிரச்சினை என்று வந்துவிட்டால் பயந்து ஓடாமல் ...அதனுள் நுழைந்து என்னவென்று பார்க்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசியல் படுகொலைகளை கூட்டமைப்பு கண்டித்தால் தவிசாளர் தாக்குதலை கண்டிக்கலாம் - யாழ்.மேயர்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் நடைபெற்ற அரசியல் படுகொலைகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்தால் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தாக்கப்பட்டமைக்கு யாழ். மாநகரசபை யில் கண்டனம் நிறைவேற்றப்படும் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாதாந்த கூட்டத்தில் தலைமையுரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பல்வேறு அரசியல் படுகொலைகள் நடைபெற்றது. இந்தப் படுகொலைகளின் பட்டியலில் யாழ்.மாநகர சபையின் முதல்வர் அல்பிரட் துரையப்பா முதல் பல உறுப்பினர்கள் பலியாகியிருக்கின்றார்கள்.

இந்தப் படுகொலைகள் நடைபெற்ற போது அதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றாத தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தாக்கப்பட்டமைக்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுமாறு சபையை கோருவது அர்த்தமற்றது என தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மாநகர சபை உறுப்பினர் பரஞ்சோதி கடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் உட்பட பல ஆயுதக்குழுக்கள் செயற்பட்டு வந்தன. யார் கொல்கின்றார்கள் யார் கடத்துகின்றார்கள் என்று தெரியாது. ஆனால், எல்லோரும் எல்லாவற்றையும் செய்தார்கள். ஆனால், தற்போது யார் செய்கின்றார்கள் என்று தெரிகின்றது.

நாட்டில் சமாதானம் வந்துவிட்டது எனக் கூறுகின்றார்கள். இருப்பினும் வன்முறைகளும் தொடர்ந்து இடம்பெற்று கொண்டு தான் உள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்பதற்காகவே கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் எனக் கோருகின்றோம் என்றார். உறுப்பினர் பரஞ்சோதியின் வாதத்துக்கு ஆதரவாக உறுப்பினர் விந்தனும் தமது கருத்துக்களை முன் வைத்ததோடு கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என கூறினார். இருப்பினும் முதல்வர் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

# இலவச நடமாடும் சேவை

லயன்ஸ் 306 B 2 மாவட்டத்தின் கொழும்பு கிராண்ட் சேக்கிள் லயன்ஸ்கழகமும் இலங்கை பொலிஸ் யாழ்.நிலையமும் இணைந்து நடத்தும் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பொதுமக்களுக்கான அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் பதிவு செய்தல், சிறு குற்றங்களுக்கான விசாரணைகளும் பதிவுகளும் மருத்துவ கண் பரிசோதனை என்பன நடைபெறும். அத்துடன் சக்கர நாற்காலிகளும் ஆயிரம் மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. லயன்ஸ் கழகத்திலிருந்து கழகத் தலைவர் லயன் பிரசாத் விக்ரமரட்ன, கழகப் பொருளாளர் லயன் ஆர்.சுதாகரன், கழக நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் லயன் பா.ரமேஷ், கழக இயக்குநர் தபுளஆரியவர்த்த, கழ உறுப்பினர் எஸ்.என்.பால்ராஜ், கழக இயக்குநர் லயன் எம்.தயானந்தன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். எனவே, பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 220 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 90 |
| தக்காளி | 60 | 90 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 100 | 60 | 80 |
| கரட் | 110 | 80 | 160 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 70 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 40 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 50 | 65 |
| பாகற்காய் | 100 | 200 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 140 | 140 |
| லீக்ஸ் | 110 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 90 | 140 |
| முருங்கைக்காய் | 70 | 110 | 60 |
| போஞ்சி | 110 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 20, | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 30-35 |

## இராசி பலன்

*27.10.2012*
*(ஐப்பசி 11, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*திரயோதசி முன்னிரவு 11.12 மணிவரை*
*உத்தரட்டாதி முன்னிரவு 11.46 மணிவரை*
*இராகுகாலம் 9.03-10.33 மணிவரை*
*சுபநேரம் 3.03-4.33 மணிவரை*
*சனிப்பிரதோச விரதம்.*

**மேடம்** வெளியூர் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறலாம், தொலைபேசி மூலம் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், போசன நன்மையுண்டு.

**கடகம்** மூத்தோரால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள்.

**சிங்கம்** சஞ்சலங்கள் தீர சனீஸ்வரனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி தேவை.

**கன்னி** பெண்களின் சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகும், பயணத்தால் பலன் கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், தொழில் முன்னேற்றமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்** தொழிலை விருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான நாள்.

**விருச்சிகம்** பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், வியாபார விருத்தியுண்டு.

**தனுசு** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும், நண்பர்கள் மூலம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், சகோதர வழி ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் நடந்து கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**மீனம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பயணங்களால் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், அதிகாரிகள் மனங்கோணும் வகையில் நடந்து கொள்ளலாம், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பறவைகள் வேட்டையாடப்படுகின்றன


## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு பகுதிக்கு தெற்காசிய நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து வரும் வெளிநாட்டு பறவைகளை வேட்டையாடி இறைச்சிக்காக எடுத்துச் செல்லும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தெற்காசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் போன்ற நாட்டுப் பறவைகள் தமது கால நிலையை கருத்திற்கொண்டு வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கு வந்துள்ளன. இவை இம் மாதம் முதல் எதிர்வரும் மே மாதம் வரை தங்கியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை அப்பகுதியில் உள்ள சில விசமிகள வேட்டையாடி இறைச்சியாக்குகின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)




நன்றி:-மிரர்

# நிர்வாகிகள் தெரிவு

(உடுப்பிட்டி)

கெருடாவில் தெற்கு தொண்டைமானாறு கிராம அபிவிருத்தி சங்கம் புனரமைப்பும் புதிய நிர்வாக சபை தெரிவும் கடந்த 11 ஆம் திகதி அம்பிகை பாலர் பாடசாலையில் நடைபெற்றது.

இதன்பிரகாரம் புதிய நிர்வாக தலைவராக இ.ஆழ்வாப்பிள்ளை, செயலாளராக மா.தம்பித்துரை, பொருளாளராக செ.ரவிக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-2-52)

# கந்தபுராணப் படிப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் பல ஆண்டுகளாக நடைபெறும் கந்தபுராணப் படிப்பு இம்முறையும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் தை மாதம் வரை நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நாளாகிய நாளைய தினம் முற்பகல் 10.29 மணி தொடக்கம் நண்பகல் 12.05 மணி வரையுள்ள சுப வேளையில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

அன்றைய தினம் தொடக்கம் பிற்பகல் 2 மணிக்கு கந்தபுராண படிப்பு ஆரம்பமாகும் என உபயகாரர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9)

# நில அபகரிப்பின் நகர்வுகள் வெற்றிலைக்கேணியிலும் தொடர்கின்றன

## முள்வேலிகள், நிரந்தர கட்டடங்கள் அமைப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி கிராமத்தில் யுத்தத்தின் பின்னர் கிராம மக்கள் மீள்குடியமர்த்தப்படும்போது இந்தக் கிராமத்தின் கடற்கரையோரமாக இக்கிராம மக்களின் சொந்த காணிகளை உள்ளடக்கி சிறிய கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அம்முகாம் மேலும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பின்னர் இந்தக் கடற்படையினர் தமது முகாமில் இருந்து கிழக்கு புறமாகவும் மேற்குப் புறமாகவும் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான காணிகளை அபகரித்து முட்கம்பி வேலிகள் இட்டனர். அந்த நடவடிக்கை இடம்பெற்று சிறிது காலத்தின் பின்னர் அந்த முட்கம்பி அமைக்கப்பட்ட எல்லைக்குள்ளே இருந்த பனை வடலிகளை கனரக வாகனம் கொண்டு அகற்றி கடற்படை முகாமில் இருந்து கிழக்குப்புறமாக நிரந்தர கட்டங்கள் அமைக்கப்பட்டு வந்தன.

தற்போது மக்கள் அன்றாடம் தமது கடற்தொழிலை மேற்கொள்வதற்காக கடற்படை முகாமில் இருந்து மேற்குப் புறமாக சென்று வரும் வழியில் மீண்டும் ஒரு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கடற்படை முகாம் அமைந்திருக்கும் இடத்தில் இருந்து 20 மீற்றர் தூரத்தில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா பாடசாலையும் சுமார் 75 மீற்றர் தூரத்தில் வெற்றிலைக் கேணி பிள்ளையார் ஆலயமும் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் விட கடற்படையினர் முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்ட கடலோரத்தில் இரண்டுக்கு மேற்பட்ட கரவலைப்பாடுகள் காணப்படுகின்றன. இந்தக் கரவலை தொழிலாளர்களும் முட்கம்பி வேலிகளால் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வெற்றிலைக்கேணி கிராமமக்கள் கடற்றொழிலை மேற்கொள்ளும் படகு, கட்டு மரங்களை தாம் விரும்பும் இடங்களில் தரையில் நிறுத்தி வைக்க முடியாத அளவுக்கு இக் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இக்கடற்றொழிலாளர்கள் மிகவும் குறுகிய பிரதேசத்திலேயே தமது கடற்றொழில் உபகரணங்களையும் படகு, கட்டு மரங்களையும் நிறுத்தி வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

எனவே, தமது அவலநிலையைக் கருத்திற்கொண்டு நில அபகரிப்பைத் தடுக்க உரிய தரப்பினர் உதவ வேண்டுமென கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-64)




# ஆலோசனைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் புதிய ஆலோசனைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது ஆலோசனைக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளவர்கள், பிரதேச சமூக நலன்விரும்பிகள், சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கியுதவுமாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் கேட்டுள்ளார். (அ-9)

# சிறுவர், முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் நடாத்தும் சிறுவர், முதியோர் தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமூக அபிவிருத்தி மன்ற காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்ற தலைவர் பி.ஏ.சி குனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய தலைவர் சி. வி. கே சிவஞானம், சிறப்பு விருந்தினராக நவக்கிரி திருவள்ளுவர் சேமிப்புக்கழக தலைவர் திருமதி தனலெட்சுமி சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் முதியோர், சிறுவர் கௌரவிப் பும் நடைபெறவுள்ளதாக சமூக அபிவிருத்தி மன்றம் அறிவித்துள்ளது. (அ-9)

# கருணாநிதி ச.ச.நி. வாணி விழா நிகழ்வு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கருணாநிதி சனசமூக நிலையத்தினரால் கடந்த 25 ஆம் திகதி வாணி விழா பூஜை நிகழ்வு இடம்பெற்றது. இவ் விழாவின்போது பரத நாட்டியம், நடனம், பாடல்கள், பேச்சுக்கள், நாடகம், கவியரங்கம், பட்டிமன்றம் என்பன மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது உயர்தர வகுப்பு மாணவிகளால் நிகழ்த்தப்பட்டன **கல்விக்கு இடையூறாக அமைவது குடும்பச் சூழலா?, சமூகச் சூழலா?** என்னும் தொனிப்பொருளில் பட்டிமன்றம் இடம்பெற்றது. அத்துடன் மாணவர்கள் ஆசிரியர்களை கௌரவிக்கின்ற நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)








இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் வாழ்நாள் வங்கியாளர் எனும் 2 ஆவது மலர் வெளியீடு அண்மையில் இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட அதி மேற்தரக்கிளையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நூலினை மேற்தரக்கிளையின் பிரதம முகாமையாளர் ஜேசுதாசனிடமிருந்து இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கே.டி.சுதர்சன் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பரணி 2<br>கி.பா:-21.5<br>தகைமை/தொழில்:-O/L, அலுமினிய பிற்றிங்<br>B/632 | பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தராடம் 4<br>உயரம்: 5'5'<br>கி.பா:-25.25<br>தகைமை/தொழில்:-BA, MA, HNDE, PGDE விரிவுரையாளர் (அரச)<br>G/631 |
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கார்த்திகை 2<br>உயரம்:-5'9"<br>கி.பா:-71<br>தொழில்/தகைமை:-A/L Diploma incomputer<br>B/634 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 2<br>உயரம்: 5'3'<br>கி.பா:-36.75<br>தகைமை/தொழில்: BFA, MA ஆசிரியை<br>G/633 |
| பிறப்பு:- 1978 இந்து<br>நட்சத்திரம்:-அத்தம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-8.5<br>தொழில்/தகைமை:- கணனி ஆசிரியர் (London P.R)<br>B/203 | பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>உயரம்: 5'3"<br>கி.பா: 19<br>தகைமை/தொழில்:- டாக்டர், சித்தமருத்துவம்<br>G/218 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-புனர்பூசம் 4<br>உயரம்:-5'9"<br>கி.பா:-49.5<br>தொழில்/தகைமை:- Msc நிகழ்ச்சித்திட்ட அதிகாரி<br>B/206 | பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>உயரம்:-5'2"<br>கி.பா: 24.5<br>தகைமை:-O/L<br>G/222 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


# தேசிய மட்டத்தில் முதலாமிடம்



யா/கோண்டாவில் இந்து மகா வித்தி யாலய மாணவி கஜலக்ஷி புவனேசன் தேசிய மட்ட கட்டுரைப்போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை வலய, மாகாண மட்டங்களிலும் கட்டுரைப்போட்டியில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)


**YARL Taxi**

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com


# உலகுக்கு இளம் விஞ்ஞானிகளை அறிமுகப்படுத்தும் கண்காட்சி

## நவம்பர் 5 இல் யாழில் ஆரம்பம்

Elate Computer Systems நிறுவனத்தினது புதியமுயற்சியாக 2012 ஆம் ஆண்டுக்குரிய மிகப்பெரும் தொழில்நுட்ப கண்காட்சியை யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா மைதானத்தில் காலை 9.30 மணியிலிருந்து இரவு 7.30 மணிவரை 5 தினங்கள் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது.

இம் மாபெரும் கண்காட்சியில் நூற்றுக்கும் அதிகமான இளம் விஞ்ஞானிகள் தமது புதிய கண்டுபிடிப்புக்களை உலகுக்கு அறிமுகப்படுத்துவதற்கு தயாராக உள்ளனர். இக் கண்காட்சியில் வடமாகாணத்திலுள்ள பல பாடசாலைகளும் தனியார் துறையினரும் தமது பங்களிப்பை ஈடுபடுத்தியுள்ளனர். இக் கண்காட்சிக்கு மக்கள் மத்தியிலிருந்து பெரும் ஆதரவும் வரவேற்பும் கிடைக்கும் என்று ஒருங்கிணைப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இக்கண்காட்சியில் கண்ணைக் கவரும் ஒளி ஜாலங்களோடு சிறுவர் விளையாட்டுக்களும் வரும் பார்வையாளர்களைக் கவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இக் கண்காட்சியில் பங்கு பற்ற விரும்பும் வியாபார நிறுவனங்கள் 077-4384353 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஏ)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடிசைக் கைத்தொழிலாளருக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன

வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப கைத்தொழில் நிறுவனத்தினால் பயிற்றப்பட்ட குடிசைக் கைத்தொழிலாளர்களுக்கான சான்றுப்பத்திரங்கள் மற்றும் தொழில்சார் உபகரணத்தொகுதிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்துள்ளார்.

கொழும்பு , பௌத்தலோகமாவத்தையில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கைத்தொழில் நிறுவனத்தில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் 15 மாவட்டங்களில் நடாத்தப்பட்ட வாழ்வின் எழுச்சி (திவிநெகும) கண்காட்சிக்கு அமைவாக குடிசைக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கில் மேற்படி நிறுவனத்தால் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு அதன்மூலம் 535 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சான்றுப் பத்திரங்கள் மற்றும் தொழில்சார் உபகரணத் தொகுதிகள் அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, மஹிந்த சிந்தனைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழ் நாட்டின் சகல இடங்களுக்கும் 2012/2013 வருட போகத்தில் விதைகள் மற்றும் பயிர்களைப் பயிரிடும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# டெங்கு நுளம்பு ஆய்வுக்குச் சென்ற அதிகாரி நீரில் மூழ்கி மாயம்

டெங்கு நுளம்பு ஒழிப்பு தொடர்பான ஆய்வுக்குச் சென்ற உயிரியல் பிரிவு உதவி அதிகாரி ஒருவர் மஹா ஓயாவில் விழுந்து காணாமற்போயுள்ளார்.

வரக்காபொல- கோதாபாலுவ பகுதி மஹா ஓயாவில் நேற்று முன்தினம் மாலை குறித்த நபர் நீராடச் சென்றுள்ளார். அதன்போது அவர் நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளதாக வரக்காபொல பொலிஸார் குறிப்பிட்டனர்.

கேகாலை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தில் கடமை புரியும் 48 வயதுடைய நபரே காணாமல்போயுள்ளார். டெங்கு நுளம்பு ஒழிப்பு குறித்து கோதாபாலுவ பகுதியில் ஆய்வுகளை நடத்த குறித்த நபர் சென்றிருந்த வேளை இவ் விபத்து நேர்ந்துள்ளது. (அ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் சோ.ஜெயதேவா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் கோ.செல்வவிநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-9)

# வரிப்பணம்மூலம் கிடைக்கும் நன்மைகளை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்

## யாழ்.பிராந்திய அலுவலக பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் இலவச சேவைக்கும் அரச ஊழியர்களுக்கான சம்பள கொடுப்பனவுகளுக்கும் வரி மூலம் கிடைக்கும் பணமே பயன்படுத்தப்படுகின்றது. பிரதேச அபிவிருத்திக்கும் வரிப்பணமே செலவிடப்படுகின்றது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டுமென உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் பிரதி ஆணையாளர் பி.சிவாஜி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கும் வரி செலுத்துவோரை கௌரவிக்கும் நிகழ்வும் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் முதலாவது பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்தில்தான் திறந்து வைக்கப்பட்டது. கடந்த 1963 ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. இலங்கையில் 1932 ஆம் ஆண்டு இறைவரித்திணைக்களம் ஆரம்பித்து வைக்கப்பட்டபோதும் பிராந்திய அலுவலகம் ஒன்று சுமார் 30 வருடங்களின் பின்பு யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் கடந்த 30 வருடகாலம் இங்கு நிலவிவந்த யுத்த சூழ்நிலை காரணமாக இறைவரித்திணைக்களத்தின் செயற்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடியவில்லை. ஆனாலும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தனது செயற்பாடுகளை மீள ஆரம்பித்த பிராந்தியக் காரியாலயம் தலா ஆயிரத்து 700 வருமான வரி செலுத்துவோரையும் பெறுமதி சேர் வரி செலுத்துவோரையும் இணைத்துள்ளது. அத்தோடு விருப்பத்திற்குரிய பெறுமதி சேர் வரி செலுத்துவோரின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் நாடளாவிய ரீதியில் யாழ். பிராந்திய காரியாலயம் அதிகளவானவர்களை இணைத்து முதலிடத்தை பிடித்துள்ளது.

இதுமட்டுமின்றி யாழ்.பிராந்திய காரியாலயம்தான் முதன்முதலில் மொத்த விற்பனை வரியை அறிமுகப்படுத்தியது. யாழ்.பிராந்திய காரியாலயமானது தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தினையும் தன்னுடன் இணைத்து வைத்துள்ளது.

50 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் எமது பிராந்திய காரியாலயத்திற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று இல்லை. தற்போது யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மூன்றாம் மாடியில் பிராந்திய அலுவலகம் இயங்கி வருகின்றது. நாம் எமக்கென்று ஒரு கட்டடத்தை அமைப்பதற்கு பல வழிகளிலும் முயற்சித்தோம்.

தற்போது யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட பின்பு அந்தக் கட்டடத்தை தருவதாக கூறப்பட்டுள்ளது. அடுத்த வருடத்திலிருந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பிராந்திய காரியாலயம் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மக்களுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்? எப்படி வரி செலுத்த வேண்டும்? என்பது தெரியாமல் உள்ளது.

வரிகளை உரிய முறையில் செலுத்தி அபிவிருத்திக்கு உதவ வேண்டும். உங்களினால் செலுத்தப்படும் வரிதான் உங்கள் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய உதவி செய்யும். எமது நாட்டில் 55 வீதமானவர்கள் வரி செலுத்துகின்ற அதேவேளை பதிவு செய்யப்பட்ட 10 ஆயிரம் நிறுவனங்களில் 900 நிறுவனங்கள்தான் வரி செலுத்துகின்றன.

நாம் ஒன்றும் சட்டத்தில் இல்லாத ஒன்றை மக்களிடம் திணிக்கவில்லை. 100 ரூபாவிற்கு 2 ரூபா வரி கொடுத்தால் நட்டம் ஏற்படப் போகின்றதா? அதனூடாக உங்கள் பிரதேசம் தான் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது என்பதை புரிந்து கொள்ளுங்கள். நாம் சட்டத்தில் இருப்பதையே வற்புறுத்துகின்றோம். வருடம் ஒன்றுக்கு 680 மில்லியன் ரூபா அரசாங்க ஊழியர்களுக்கு வேதனமாக வழங்கப்படுகின்றது. இந்தப் பணத்தை அரசாங்கம் வரியின் ஊடாகவே ஈடு செய்கின்றது. எனவே, வரி செலுத்துவது ஒவ்வொருவரினதும் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)






உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கும் வரி செலுத்துவோரை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பி. சிவாஜி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உள் நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி திருமதி மல்லிகா சமரசேகர பிரதம விருந்தினராக கலந்து கொண்டதோடு யாழ். பிரா ந்திய காரியாலயத்தினால் தெரிவு செய்யப்பட்ட வரி செலுத்துவோரையும் கௌரவித்தார். பிரதம விருந்தினர் வரி செலுத்தியோரை விருது வழங்கி கௌரவிப்பதையும் அருகில் யாழ். பிராந்திய இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் நியமனம் அரசியலமைப்புக்கு முரண்

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

சிரேஷ்ட நீதிபதிகள் இருக்கும் நிலையில் 30ஆவது இடத்தில் உள்ள ஒருவரை நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளராக நியமித்தமை மூலம் அரசியலமைப்பு மீறப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நீதிச்சேவை ஆணைக்குழு வின் செயலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அநுரகுமார திசாநாயக்க எம்.பி. நேற்று முன்தினம் பாராளுமன்றில் சபை ஒத்திவைப்பு பிரேரணையொன்றை முன்வைத்தார்.

இது தொடர்பான விடயத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் 65 க்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் உள்ளனர். ஆனால் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்படவில்லை.

30ஆவது இடத்திலுள்ள மாவட்ட நீதிபதியொருவரே நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் 29பேர் முன்னால் இருக்கும் சூழலில் இவர் நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டமைக்கு விசேட காரணம் இருக்கவேண்டும்.

அரசியலமைப்பின் மூலம் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இந்நியமனத்தின் மூலம் அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஜூலையில் வெளியிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்புடையனவாக இல்லை.

நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஒரு நீதிமன்றம் இல்லை. அது ஒரு நிர்வாகக் குழு. நீதிச்சேவை ஆணைக் குழுவை நீதிமன்றமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

நீதிச்சேவை ஆணைக்குழு தனக்கு உரிமையில்லாத விடயங்களை செய்துள்ளது. அரசாங்கத்துக்கு இந்த ஆணைக்குழு எந்தப் பிழையையும் செய்யவில்லை. நீதிபதிகளுக்கே அந்த ஆணைக்குழு பிழை செய்துள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழு தனக்கு வழங்கப்பட்ட விடயப்பரப்பை மீறி செயற்பட்டு நீதிபதிகளுக்கு அநீதியிழைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# படைவீரர் நினைவுத்தூபி அகற்றப்படமாட்டாது

## அரசாங்கம் தெரிவிப்பு

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள படைவீரர் நினைவுத் தூபி அகற்றப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த நினைவுத் தூபியை அகற்றிக் கொள்ள முடியாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

9 ஆயிரம் படை வீரர்களின் உயிர்த் தியாகத்தை நினைவுகூரும் வகையில் கிளிநொச்சியில் படைவீரர் நினைவுத் தூபியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நினைவுத் தூபி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்த் தளபாடங்கள் அடங்கிய அருங்காட்சியகம் ஆகியவற்றை அகற்றிக்கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அருங்காட்சியகம் மற்றும் நினைவுத் தூபி என்பன நல்லிணக்க முயற்சிகளுக்கு தடையாக அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் தமிழக முதல்வர் கருணாநிதி ஆகியோர் குற்றம் சுமத்தியிருந்தமை தெரிந்ததே. (அ-2)




★ 1275-ஆம்ஸ்டர்டாம் நகரம் அமைக்கப்பட்டது.

★ 1682-பென்சில்வேனியாவின் பிலடெல்பியா நகரம் அமைக்கப்பட்டது.

★ 1795-ஸ்பானியக் குடியேற்ற நாடுகளுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையேயான எல்லைகளை வரையறுக்கும் உடன்படிக்கை ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.

★ 1806-பிரெஞ்சுப் படையினர் பேர்லின் நகரினுள் நுழைந்தனர்.

★ 1807- பிரெஞ்சு ஸ்பானியப் படைகள் போர்த்துக்கல்லைக் கைப்பற்றின.

★ 1810-ஐக்கிய அமெரிக்கா முன்னாள் ஸ்பானியக் குடியேற்ற நாடான மேற்கு புளோரிடாவை இணைத்துக் கொண்டது.

★ 1867-கரிபால்டியின் படைகள் ரோம் நகருள் புகுந்தன.

★ 1870- ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பிரெஞ்சுப் படைவீரர்கள் மெட்ஸ் நகரில் இடம்பெற்ற போரில் பிரஷ்யாவிடம் சரணடைந்தனர்.

★ 1891-ஜப்பானில் 8.0 நிலநடுக்கம் ஏற்பட்டதில் 7 ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

★ 1924-உஸ்பெக் சோவியத் குடியரசு சோவியத் ஒன்றியத்தில் அமைக்கப்பட்டது.

★ 1953-தெற்கு அவுஸ்திரேலியாவில் ஈமியூ ஃபீல்ட் என்ற இடத்தில் டோட்டெம் 2 என்ற பிரித்தானிய அணுவாயுத சோதனை மேற்கொள்ளப்பட்டது.

★ 1958-பாகிஸ்தான் முதலாவது ஜனாதிபதி இஸ்காண்டர் மிர்சா இராணுவப் புரட்சி ஒன்றில் பதவியிறக்கப்பட்டு ஜெனரல் அயூப் கான் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★ 1961- நாசா தனது முதலாவது சட்டர்ன் 1 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது.

★ 1962-ஐக்கிய அமெரிக்காவின் U-2 விமானம் ஒன்று கியூபாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

★ 1971-கொங்கோ மக்களாட்சிக் குடியரசு சயீர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

★ 1979-செயின்ட் வின்சென்ட் கிரெனேடின்ஸ் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1981-சோவியத் நீர் மூழ்கிக்கப்பல் U 137 சுவீடனின் கிழக்குக் கரையில் மூழ்கியது.

★ 1991-துருக்மெனிஸ்தான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1991-போலந்தில் 1936 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற்தடவையாக சுதந்திரமான தேர்தல்கள் இடம்பெற்றன.

★ 1999-ஆர்மீனியாவில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் பிரதமர் அவைத் தலைவர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

★ 2005- பாரிசில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு கலவரம் ஏற்பட்டது.

★ 2007- கொங்கோவில் இடம்பெற்ற பெரு வெள்ளம் காரணமாக 30 பேர் உயிரிழந்து 100 பேர் வரை காயமடைந்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1728-ஜேம்ஸ் குக், பிரித்தானியாவின் கடற்படைக் கப்டன், நாடுகாண் பயணி (இ.1779)

★ 1858-தியொடோர் ரோசவெல்ட், 26 ஆவது அமெரிக்கக் குடியரசுத் தலைவர் (இ.1919)

★ 1920-கே.ஆர். நாராயணன், இந்தியாவின் 10 ஆவது குடியரசுத் தலைவர்

★ 1977-குமார் சங்கக்கார, இலங்கையின் துடுப்பாளர்

**இறப்புக்கள்**

★ 1605-அக்பர் முகலாய மன்னன் (பி.1542)

★ 1980-ஜோன் விளெக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1899)

★ 1992-டேவிட் போம், அமெரிக்க இயற்பியலாளர், தத்துவவியலாளர் (பி.1917)

# இலங்கையில் கல்வி அறிவு 97 வீதமாக உள்ளது

## அமைச்சர் ராஜித பெருமிதம்

(கொழும்பு)

இலங்கையின் கல்வி அறிவு 97% ஆகக் காணப்படுவதாகவும் அதன்படி தெற்காசியாவிலேயே உயர்கல்வி அறிவுடைய நாடாக இலங்கை விளங்குவதாகவும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ர்ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அண்மையில் பேருவளை தொகுதியில் 5 மாதிரி பாடசாலைகளை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், நாம் இங்கு ஆரம்பிப்பது எமது நாட்டின் மற்றுமொரு கல்வி கருத் திட்டமாகும். இதற்காக அரசாங்கம் பாரிய நிதியினை ஒதுக்கி வருகின்றது. 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளை இலங்கையில் உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டங்களை மேற்கொண்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

சிறிய எமது நாட்டில் தான் இலவசக் கல்வித் திட்டம் காணப்படுகிறது. மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி. இவ்வாறு இலவசமாக கல்வி வழங்கும் ஒரு நாடு உலகிலேயே இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். புத்தகங்கள், சீருடைகள், மஹாபொல புலமைப் பரிசில், பல்கலைக்கழக கல்வி என்றவாறு அரசாங்கம் பாரிய தொகையினை கல்விக்காக செலவிடுவதாகவும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் பியல் நிஷாந்த எம். அம்ஜாட் பிரதேச சபையின் உப தலைவர், உறுப்பினர்கள் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# பங்களாதேஷின் அணு உலை கிழக்கு பகுதியை பாதிக்கலாம்

## அமைச்சர் சம்பிக்க சந்தேகம்

கூடங்குளம் அடங்கலான இந்தியாவில் உள்ள அணு உலைகள் குறித்து சர்வதேச அணு சக்தி அதிகார சபை முழுமையாக கண்காணித்து வருகின்றது. இலங்கைக்கு இவற்றால் ஏற்படக்கூடிய தாக்கத்தை தடுப்பதற்காகவே அரசாங்கம் பல்வேறுபட்டநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார்.

பங்களாதேஷில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அணு உலையினால் கிழக்கு பிரதேசத்திற்கு பாதிப்பு ஏற்படலாம். இது தொடர்பில் கவனம் செலுத்தி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். வாய்மூல விடைக்காக அஜித் பி.பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், கூடங்குளம் அணு உலையினால் எமக்கு எதுவித பாதிப்பும் இல்லை என நாம் ஒரு போதும் கூறவில்லை. இதனால் ஏதும் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு முகம்கொடுக்க முன்னேற்பாடுகள் செய்துள்ளோம். கூடங்குளம் இலங்கைக்கு 100 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இலங்கைக்கு அண்மையிலுள்ள அணு உலைகளினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பது தொடர்பில் இந்தியாவுடன் பேசி வருகிறோம்.

ஒப்பந்தமொன்று கைச்சாத்திடவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். சர்வதேச அணுசக்தி அதிகார சபை விஞ்ஞாபனத்தில் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திட்டுள்ளன. அதன்படி நாம் செயற்பட வேண்டும். இந்தியாவில் உள்ள அணு உலைகள் தொடர்பில் 3 வருடத்துக்கு ஒரு தடவை சர்வதேச அணு சக்தி அதிகார சபையினால் கண்காணிக்கப்படுகிறது. இதற்காக நிரந்தர கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தியா இரகசியமாக அணு உலை அமைக்கவில்லை.

இலங்கையில் அணு உலைகள் அமைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை. இலங்கையில் அணு தொழில்நுட்பத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 2014 இல் களனியில் அணு தொழில்நுட்ப நிலையம் அமைக்கப்படும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பல் பயன்தரும் மரங்களும் வேளாண் காடுகளும்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மரங்களைப் பற்றியும் மரத்திற்கும் எம்க்குமுள்ள உறவைப்பற்றியும் எங்களுக்காக இயற்கையன்னை அள்ளித் தந்திருக்கும் பல பயன்களையுடைய மரங்களைப்பற்றியும் இத்தொடரின் மூலம் பல விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். இயற்கையாக இருந்த காடுகளை மாற்றி எமது தேவைக்காக பயன்படுத்தும் போதும் இருந்த காடுகளை இழந்தாக இல்லாது வேளாண் காடுகளாக உருவாக்க உத்வேகங் கொண்டு கியே சிந்திக்கின்றோமல்லவா. அனைத்தையும் எமக்கேற்றது போல மாற்றி எமக்கிசைவானதாக அமைக்க முயற்சிக்கும் எமக்கு மரத்தின் உணர்வுகளை ஒரு தரமாவது உணர முடிந்தால் எமக்கும் மரத்திற்குமிடையிலான பிணைப்புடன் அதிசயம் புரியும். மரமென்பது வெறும் ஜடமல்ல. மரத்திற்கு கொடுக்கும் மதிப்பு உணர்வினும் மேலானது.

**இழந்ததை மீட்டெடுப்போம்**

களனி திருத்தி பயிர்செய்ய ஆரம்பித்த நாள்முதல் இன்று தொடரும் அபிவிருத்திகளில் செய்து காட்டுங்களேன். உங்கள் பெயரால், உங்களது பிள்ளைகளின் பெயரால், நல்ல நட்பின் பெயரால் மரம் நடுவதை ஊக்குவிப்போமா. மரங்களின் சுவாத்தியத்துடன் எங்கள் மூச்சும் கலந்து விட வாய்ப்பளிப்போமா? வனங்களாவதை ஊக்குவித்து அதன் மூலம் எமக்கும் எமது சந்ததிக்கும் தேவையான அனைத்தையும் பெற முயற்சி செய்வோம். எமக்கிடையேயான சாதி, சமய, குல, பால், வயது, மொழி, இன வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் நலமேவாழ வேளாண்காடுகளை உருவாக்



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

24-I

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மரங்களை நடுகை செய்யும் திட்டம் பரந்துபட்ட அளவிலே நாடு பூராகவும் முடுக்கி விட்டிருக்கும் நிலையில் இத்தொடர் மூலமாக மரங்களைப் பற்றிய சுவையான அரிய தகவல்களுடன் இணையலாம் என எண்ணுகிறேன்.

மர நடுகைத் திட்டம் வெறுமனே அடையாளப்படுத்தலாக மட்டும் நின்று விடாது அனைவரும் இணைந்து உள்ளத்தால் உணர்ந்து இயற்கையன்னைக்கு செய்யும் அர்ப்பணமாகவே கருத வேண்டும். எமது வாழ்வில் மரம் தந்த சுகத்தை மரத்துப்போன எம்மால் உணரக்கூட முடியாதிருப்பதை என்னவென்பது. இங்கே உணர்வற்ற, உணர்ச்சியற்ற ஜடத்தை குறிப்பிடுவதற்கு மரத்தை அடைமொழியாக்கிடினும் உலகிலுள்ள மரமனைத்திற்கும் இறைவன் பேசும் ஆற்றலை கொடுத்தால் மனித குலத்தின் செய்கை பற்றி விலாவாரியாக கூறி வைக்கும். எமது வாழ்க்கையில் மரம் தந்த வாழ்வை மதித்து ஒரு மரமாவது நடுகை செய்து வளர்த்து இப்பூமித்தாயை மகிழ்விப்போமா.

மரம் நடுகை செய்யும் போதே எமக்கு என்ன என்ன பயன்களைத் தரப்போகின்றது என்னும் சுய நலத்தினை உள்வாங் செயலுக்குள் மரவளத்தை பெரிதாகவே இழந்து விட்டோம். மரத்தை நொடிப்பொழுதில் வெட்டிச் சரிப்பது சுலபம். ஆனால் நட்டு வளர்ப்பது கடினம். வெட்டுவதிலுள்ள அக்கறையும் எதிர்பார்ப்பும் நடுவதில் இருப்பதில்லை. காடுகளாக இருந்த பூமி நாடாக மாறினும் காடு அல்லது வன சூழலிலிருந்து முழுமையாக எம்மால் மாறிவிட முடியவில்லை. வன சூழலை முழுமையாகவே தவிர்த்தால் வனாந்தரத்தினை நோக்கிய பயணமாகவே அமைந்து விடும். இயன்றவரை இழந்த வன தொகுதியை அதிலுள்ள மரங்களை நடவு செய்ய இத்தினத்தில் திடசங்கற்பம் கொள்வோம். நாம் கொண்டாடும் வைபவ தினங்களில் மரம் நடுவதை பழக்கப்படுத்திக் கொள்வோம். மரங்களை மதிப்போம். மரங்களை அன்னைக்கு ஒப்பிடுவார்கள். அன்னைக்காக நாம் கொண்டாடிய ஒன்பது நாட்களான நவராத்திரியின் பெறுபேறாக அன்னையை பிரதிபலிக்கும் மரங்களை நடவு செய்வதை வழக்கப்படுத்திக் கொள்வோம்.

இக்கட்டுரையினூடாக செய்தியாகவே இதனைப் பார்க்கின்றேன் . இதனை வாசிக்கும் எம்மினிய உறவுகள் நீங்கள் முன் மாதிரியாக மரம் நடுதலை உங்களிடங் குவதில் நாமனைவரும் ஒன்றிணைவோம். இது வெறும் எழுத்தாகவோ வாய்ப்பேச்சாகவோ இல்லாது செயலில் காட்ட வேண்டிய கைங்கரியமாகும். நிச்சயமாக எம்மினிய உறவுகளனைவரும் இதில் இணைந்து கொள்வீர்களென்ற நம்பிக்கையும் எமக்குண்டு.

இடி இடித்தபோது அதைத்தாங்கிய மரம் வெள்ளம் பெருகி அலையாய் இழுத்தபோது எம்மை தடுத்து தாங்கியதை சுனாமியின் நினைவுகளாக பதியப்பட்டிருக்கின்றது. மரங்களிணைவது வனத்தொகுதியை வலுப்படுத்தும். அதுவே பசுமையின் அடையாளமுமாகும். இழந்த பசுமை மீண்டும் பெற்றிட பசுமையின் சின்னங்களான மரவளத்தைப் பெருக்குவோம். இனியொரு பசுமைப் புரட்சியில் மரவளத்தை தக்க வைத்தலும் பாதுகாத்தலும் இன்னும் வேளாண் காடுகளாக எமது வாழ்வியலுடன் இணைத்துக் கொள்வதும் முக்கியமான அத்தியாயங்களாகும். கடந்த பசுமைப்புரட்சி உணவுற்பத்தியை மட்டுமே நோக்கமாக கொண்டியங்கியதால் உணவுற்பத்தியை பெருக்கிய வெற்றிக்களிப்பிலேயே இருந்து விட்டது. அதனாலேற்பட்ட பின்விளைவுகளை உணரத் தலைப்படவில்லை. இப்போது உணவுற்பத்தியுடன் சேர்த்து நாம் வாழும் சூழலைப் பற்றியும் உணரத் தலைப்பட்டதால் இனியொரு பசுமைப் புரட்சியில் நிறையவே மாற்றங்களை எதிர்பார்க்க உலகம் தயாராகிவிட்டது. நாம் வாழும் சூழலுக்கு மதிப்பளிக்கவும் முன்னுரிமை கொடுக்கவும் இன்னும் சூழலினை விருத்தி செய்யவும் முனைப்புக் காட்டுவதானது எமது வாழ்வியலின் இன்னொரு தொடக்கமெனலாம்.

பிறந்து மரத்திலான தொட்டிலில் கிடந்ததும் பின் மரணித்து மரக்குற்றிகளினிடையே படுத்தி சேர்த்தெரிக்கும் வரை மரத்திற்கும் மனிதனுக்கும் எவ்வளவு தொடர்புண்டு. எமது வாழ்க்கை மரங்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. இதைத்தான் கவிஞர் வைரமுத்து அவர்கள் **மறந்தான் மனிதன் மறந்தான் மரந்தான் மனமும் மரந்தான்** என விளித்து மரத்திற்கும் மனித மனத்திற்குமான தொடர்பாடலை மொழியின் வீச்சிலிருந்தி விளித்திருக்கிறார். நன்றே செய்வோம். அதையும் இன்றே செய்வோம். மரமொன்று நடவு செய்து மனிதம் காப்போம்.

# மன்னார் நீதிமன்றத் தாக்குதல்; 6 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

மன்னார் நீதிமன்றத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட 43 பேரில் முதல் தடவையாக 6 பேர் மேல் நீதிமன்றத்தாலும் 11 பேர் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தாலும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மிகுதி 26 பேரின் வழக்கு விசாரணைகள் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற போது 6 பேரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

26 பேரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இதில் 20 பேருக்கும் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணையிலும் பத்தாயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் விடுவித்ததுடன் இவர்களை வாரத்தில் ஒருமுறை மன்னார் மாவட்ட பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார்.

எஞ்சிய ஆறு பேரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



யாழ். மாவட்டத்தில் சீன அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி சம்பந்தமாகவும் தேவைகள் தொடர்பாகவும்கலந்துரையாடல்ஒன்று நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியுடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான சீன தூதுவர் யுஜியாங்கோ கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். (படம் [illegible])

# காங்கேசன்துறை வீதி அகலிப்பு புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள்

## 15 மீற்றருக்கு அப்பால் இருக்க வேண்டும்

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான எ தர வீதியாக யாழ். காங்கேசன்துறை வீதி இருப்பதனால் பொது வழிகள் சட்டத்தின் பிரகாரம் இதற்கான கட்டட எல்லை வீதியின் மத்தியிலிருந்து 15 மீற்றர் என்பதனால் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள் வீதியின் மத்தியிலிருந்து 15மீற்றருக்கு அப்பால் அமைக்கப்பட வேண்டும் என யாழ். மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

தற்போதைய வீதி விஸ்தரிப்பின் போது ஏற்கனவே வீதிக்குச் சமீபமாக இருக்கும் கட்டடங்கள் மத்தியிலிருந்து 7.5 மீ தூரம் வரை இடித்து அகற்றும் போது அதனால் வீட்டின் பாதுகாப்புக்கு பாதகமாக அமையக் கூடிய பகுதிகளை மறைப்பதற்கான கட்டுமான வேலைகளை மட்டும் மேற்கொள்ளலாம்.

இவ்வாறான திருத்த வேலைகளில் வீதியின் மத்தியிலிருந்து 15 மீற்றர் எல்லைக்குள் புதிய நிரந்தர தூண்களோ வேறு புதிய நிர்மான வேலைகளோ மேற்கொள்ளலாகாது.

மேலும் எதிர்கால அபிவிருத்தி வேலைகள் (வீதி, மின்சாரம், நீர்வழங்கல், தொலைத் தொடர்பு, வடிகால்கள்) தொடர்பாக அகலிப்புக்கான தேவைகள் ஏற்படும் இடத்து தேவைக்கேற்ற அளவில் மீண்டும் இந்தக் கட்டுமானங்கள் அகற்றப்பட நேரிடும்.

வீதி அகலிப்பின் போது 7.5 மீற்றர் வரை அகற்றப்பட்ட தொகுதிக்காக தனிக் கட்டடங்கள் மாடிக் கட்டடங்களாக கட்ட வேண்டிய தேவை ஏற்படின் மாடிக் கட்டடத்திற்கான நிர்மாண வேலைகள் வீதியின் மத்தியிலிருந்து 15 மீற்றருக்கு அப்பால் மட்டுமே அமைக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (ஏ)

# டெங்கு கட்டுப்பாடு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சி பிரிவு ஆகியன இணைந்து நடத்தும் டெங்கு கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.




இக்கலந்துரையாடலில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

83

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

யாப்பகுவ அரண்மனைச் சிற்பங்கள்

## தென்புலம் பெயர்ந்த தலைநகர்கள்

யாப்பகுவை இலங்கை வரலாற்றில் கலிங்கத்து மாகனுக்கு பிற்பட்ட கால சிங்கள வரலாறு, அனுராதபுரக் காலம் போன்றோ, பொலநறு வைக் காலம்போன்றோ சிறப்பான கால கட்டமாக அமயவில்லை. பொதுவாக ஒரு தேய்வு நிலை காணப்பட்டது. மாகனின் ஆட்சிக்குப் பின்னர் தலைநகர்கள் தென்புலம் பெயர்தல் ஒரு சாதாரண நிகழ்சியாக மாறிவிட்ட்து. நிலையான ஆட்சியாளர்கள் இல்லாமையால், பாதுகாப்பான இடங்களில் தமது தலைநகர்களை மன்னர்கள் நிறுவிக்கொண்டனர். அதனால் தம்பதேனியா, யாப்பகுவை, குருநாகலை, கம்பளை, றஜிகமம், கோட்டை என இலங்கையின் இராசதானிகள் தொடர்ந்து மாறிவந்தன. ஏற்கனவே விபரித்த மாதிரி தம்பதேனியாவின் உதயத்திற்கு 3ஆம் விஜயபாகு காரணமாகினான். பொலநறுவை கலிங்கமாகனால் ஆளப்பட்டபோது தம்பதேனியாவிலிருந்து விஜயபாகு சிற்றரசனாக ஆட்சிசெலுத்தினான். அடுத்து முடிதரித்த இரண்டாம் பராக்கிரமபாகு, தன் பிள்ளைகளுடனும் மருமகனுடனும் இணைந்து பாண்டியர்களின் படைபலத்துடன் கலிங்கத்து மாகனை பொலநறுவையிலிருந்து கலைப்பதில் வெற்றிகண்டான்.


இரண்டாம் பராக்கிரமபாகு மரணித்ததும் மூத்த புதல்வனான 4ஆம் விஜயபாகு முடிசூடினான். (கி.பி.1271-1273) தம்பதேனியப் பிரதேசத்தை வலிமையாக்கிக் கொண்டு குறகியகாலம் ஆட்சி செய்துள்ளான். அவனுடைய ஆட்சியின் இரண்டாம் வருடம் அவனுடைய தளபதிகளில் ஒருவனான மித்திரன் என்பவன் ஆட்சிக்கு எதிராகக் கிளம்பினான். அவன் அரண்மனை வேலையாள் ஒருவனை இலஞ்சம் கொடுத்து, தன்பக்கம் சேர்த்து, அரசனை ஒருநாள் இரவு கொலை செய்வித்தான். இதனைக் கேள்விப்பட்ட விஜயபாகுவின் சகோதரன் புவனேகபாகு பயத்தால், சுபகலைக்கோட்டைக்கு தப்பியோடினான். தளபதி மித்திரன் அதன்பின்னர் தம்பதேனியாவுக்குச் சென்றான். அரசனுக்கான ஆடை, ஆபரணங்களை அணிந்து, சிம்மாசனத்தில் அமர்ந்து முடிசூடிக்கொண்டான். அதேவேளை மந்திரிகள் எல்லாரும் ஒன்றுகூடி நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை குறித்து ஆலோசனை செய்தார்கள். தம்பதேனிய படைவீரர்களாக ஆரியவீரர்களும் (ராஜபுத்தான வீரர்கள்), சிங்கள வீரர்கஞும் இருந்தனர். ஆரியவீரர்களுக்கு தலைவனாக தாகுறாகன் என்பவன் விளங்கினான். இப்படை வீரர்களுக்கான வேதனம் நீண்ட காலமாகக் கொடுக்கப்படவில்லை. ஆரிய வீரர்களின் வேதனத்தை முதலில் வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆரிய வீரர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அமைச்சர்கள் பலதடைவைகள் முயன்றனர். ஒரு கட்டத்தில் 700 ஆரிய வீரர்களும் ஒருங்கே தாகுறாகன் தலைமையில் எதற்கும் அரசனை சென்று சந்திப்பதாக முடிவு செய்தனர். அதன்படி சென்றபோது அரச சிம்மாசனத்தில் தளபதி மித்திரன் அமர்ந்திருப்பதைக்கண்டு திகைத்தனர். உடனே தாகுறாகன் தன்தோழர்களுக்கு சைகை செய்தபடி தன்வாளைச் சடுதியாக உருவி மித்திரனின் தலையைத் துண்டித்தெறிந்தான்.

நாட்டில் சிறு பரபரப்பு ஏற்பட்டது. சிங்கள வீரர்கள் "இதனை என்ன நோக்கத்துடன் செய்தீர்கள்" எனக் கோபத்துடன் கேட்டனர்" "சுபகலையில் (யாப்பகுவையில்) தங்கியுள்ள எங்கள் இளவரசர் புவனேகபாகுவிற்கு விசுவாசம் தெரிவித்து இதனைப் புரிந்தோம்" என்றனர். அதனை ஏற்றுக்கொண்ட சிங்கள வீரர்கள் ஆரியவீரர்களுடன் இணைந்து சுபகலைக்கு (யாப்பகுவைக்குச்) சென்று புவனேக பாகுவை சுபகலையிலிருந்து தம்பதேனியாவுக்கு அழைத்து வந்தனர். புவனேக பாகுவை மன்னனாக முடிபுனைந்தனர். (கி.பி.1273-1284) புவனேகபாகு ஆரியவீரர் களுக்கும் சிங்கள வீரர்களுக்கும் ஊதியத்தையும் பரிசுகளையும் வழங்கினான் எனச் சூளவம்சம் விபரிக்கிறது.

புவனேகபாகுவிற்கு நாலா திக்குகளிலிருந்தும் அரசியல் சவால்கள் விடப்பட்டன. விஜயபாகுவிற்குச் சார்பான வன்னித்தலைவர்கள் இவனுக்கு எதிராக எழுந்தனர். சோழகங்கன், கலிங்கராயர் என்பவர்களின் தலைமமையில் தமிழர் படையெடுப்பு நடந்தது. இதனைப் புவனேகபாகு முறியடித்தான். இலங்கையின் யாழ்ப்பாண அரசன் சிங்கை ஆரியன் பாண்டியரின் உதவியுடன் தன்னைத் தாக்கக்கூடும் என்ற பயம் புவனேகபாகுவிற்கு இருந்தது. இவைகாரணமாக மலைகளாலும் காடுகளாலும் சூழப்பட்ட பாதுகாப்பான இடத்திலிருந்த யாப்பகுவைக்குத் தனது தலைநகரை மாற்றிக்கொண்டான்.

நாட்டில் இக்காலத்தில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அக்காலத்தில் பாண்டிய மன்னன் (ஜடாவர்மன் குலசேகர பாண்டியன்) தன் மந்திரியும் படைத்தளபதியுமான ஆரியச் சக்கரவர்த்தி என்பவனின் தலைமையில் தமிழர்சேனையொன்றினை இலங்கைக்கு அனுப்பவைத்தான். தென்னிலங்கை யாப்பகுவைக்குள் படையுடன் புகுந்து அங்குள்ள புனித தந்ததாதுவையும் ஏராளமான திரவியங்களையும் கைப்பற்றிக் கொண்டு பாண்டிநாட்டிற்கு திரும்பிச் சென்றான். அவற்றைப் பாண்டியன் குலசேகரனிடம் கையளித்தான்.

(தொடரும்)



4ஆம் விஜயபாகு மன்னனால் புனரமைக்கப்பட்ட கண்டி விகாரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வறிய மக்களுக்கு மட்டுமா சட்டம் அமுல்படுத்தப்படுகிறது!

நாட்டில் வறிய மக்களுக்கு எதிராக மட்டுமே சட்ட ஒழுங்கு அமுல்படுத்தப்படுவதாக ஓய்வு பெற்ற நீதவான் பீ.பி. வராவெவ தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் செல்வாக்குடைய குறிப்பிட்ட சிலர் நீதிமன்றக் கட்டமைப்பின் அதிகாரத்தை துச்சமாக மதிக்கின்றனர்.

அரசியல் சாசனத்தின் முதல் பகுதியும் இறுதிப்பகுதியும் முக்கியமானது என்ற போதிலும் அதன் உள்ளடக்கம் ஜனாதிபதி என்ற சர்வாதிகாரியை உருவாக்கியுள்ளது.

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை பாதுகாக்கப்பட்ட வேண்டுமென அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் நீதிமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையிலான முரண்பாடுகளினால் அப்பாவி மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என கூறப்பட்டுள்ள போதிலும் இது உண்மையில் வறிய மக்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாக அமைந்துள்ளது.

செல்வாக்கு உடையவர்கள் செல்வந்தர்கள். சட்டமா அதிபரைச் சந்தித்து வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை காணப்படுகிறது என முன்னாள் நீதவான் வராவெவ தெரிவித்துள்ளார். (அ-2)

# சட்டத்தின் பிடியிலேயே கே.பி. விசாரணையும் தொடர்கிறது

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் சட்டத்தின் பிடியிலேயே இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மேலும் அவர் மீதான விசாரணைகளும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. பயங்கரவாத தடைச்சட்டமோ அல்லது வேறு எந்த சட்டமோ சட்டத்துக்கு உட்பட்ட வகையிலேயே அவர் அரசாங்கத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்த நிலையில் சர்வதேச மட்டத்தில் இயங்கும் புலம்பெயர் மக்களின் ஒரு பகுதியினரான புலி ஆதரவாளர்களுடன் பேச்சு நடத்த வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது. அதற்காக கே.பியை பயன்படுத்தவுள்ளோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

# மின்குமிழ்கள் செயலிழப்பதால் வீதிகள் இருளில் மூழ்கின

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை பிரதேச சபையினரால் தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு வீதிகளுக்கு தன்னியக்கமாக இயங்கும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

ஆனால் இவ்வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு குறுகிய காலத்தில் பெரும்பாலானவை செயலிழந்து விட்டன. இவை அனைத்தும் தன்னியக்கமாக இயங்கக்கூடிய நிலையிலேயே பொருத்தப்பட்டன.

தற்போது தன்னியக்க பொறிமுறை செயலிழந்தமையாலேயே மின்விளக்குகள் ஒளிரவில்லை. இதனால் வீதிகள் இருளில் மூழ்கிக் கிடப்பதாக அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் இரவு வேளையில் மேற்படி வீதியானது மின் விளக்குகளின் ஒளியின்றி இருள் சூழ்ந்து காணப்படுவதால் அவ்வழியாக பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்வதாக குறிப்பிடப்படுகிறது. இருளில் மூழ்கியுள்ள வீதிகளுக்கு மீண்டும் பருத்தித்துறை பிரதேசசபையினர் ஒளியேற்றுவது எப்போது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (அ-2-52)

# 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தில் சிறுபான்மையினருக்கு நம்பிக்கை

## பிள்ளையான் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் இரத்துச் செய்யப்படுமென்பது நாட்டில் மீண்டும் மோதல்கள் ஏற்பட மூல ஆதாரமாக அமையும் என ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் இரத்துச் செய்யப்படுவதை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் இந்த அரசியல் அமைப்பு திருத்தத்தை அமுல்படுத்தி மாகாண சபைகளுக்கு அதிகளவிலான அதிகாரங்களை வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் உட்பட நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்கள் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக கடும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இதன் மூலம் அந்த மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து செல்வது முக்கியமானது. இந்த அரசியல் அமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என கூறுபவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சிலரே அன்றி அரசாங்கம் அல்ல எனவும் சந்திரகாந்தன் கூறியுள்ளார். (அ-2)

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் ஜனவரி 30 இல் வெளியாகும்

## பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க போராட்டத்தினால் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் காலதாமதமடைந்திருந்தது.

எனினும் தற்போது இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (அ-2)

# கிடங்கில் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

(ஆனையிறவு)

மண் அகழ்வதற்காக வெட்டப்பட்ட கிடங்கினுள் தவறி விழுந்த சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான். இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கண்ணகி நகர் புன்னைநீராவியடிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, மண்அகழ்விற்காக வெட்டப்பட்ட கிடங்கினுள் மழைநீர் தேங்கி நின்றவேளை சிறுவன் தவறி விழுந்ததினாலேயேஇச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் அதேயிடத்தை சேர்ந்த றமேஸ்குமார் தனுராஜ் (வயது 3) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். (அ-3-269)

# வெளிநாட்டில் வாழ்வோர் தாய்நாட்டை நினைத்து பெருமிதம் கொள்ள வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் தாய்நாட்டை நினைத்து பெருமிதம் கொள்ள முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதனை தொடர்ந்து நாடு பாரியளவிலான அபிவிருத்தியை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சகல இன மக்களும் சமாதானமாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய நிலைமைகளை நேரில் வந்து பார்வையிடுமாறு டுபாய் வாழ் இலங்கையர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.


தாய்நாட்டின் பெருமையை உலக சமூகத்திற்கு எடுத்துரைக்க வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சில தரப்பின் ஆதரவாளர்கள் இலங்கை தொடர்பில் உலக அரங்கில் பிழையான சித்திரத்தை வரைவதற்கு முயற்சிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இணைய தளத்தின் ஊடாக பயங்கரவாதிகள் இலங்கை தொடர்பில் பிழையான கருத்துக்களை பிரசாரம் செய்ய முயற்சித்து வருவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கு ஒரு தடவையேனும் விஜயம் செய்யாத நபர்கள் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தக் கூடாது எனவும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதப் பிடியில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்த வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்து பகுதி மக்களும் தற்போது பூரண சுதந்திரத்தை அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் சாவகச்சேரி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமல் மங்கள விளக்கேற்றுவதையும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தனங்கிளப்பு செய்தியாளர்)

# கும்பாபிஷேகம்

(புன்னாலைக்கட்டுவன்)

கோண்டாவில் மேற்கு சாமுண்டாம்பா சமேத ஸ்ரீ சிவஞானவைரவர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.27 மணி தொடக்கம் 7.40 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறுமென ஆலய அடியார்கள் அறிவித்துள்ளனர். (அ-9-78)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இருபது இலட்சம் புனித குர்ஆன் பிரதிகள் ஹாஜிகளுக்கு

(கொழும்பு)

புனித ஹாஜிகளுக்கு வழங்கவென தமிழ் உட்பட பல மொழிகளில் மொழிப்புரை செய்யப்பட்ட இருபது இலட்சம் புனித குர்ஆன் பிரதிகள் ஹாஜிகளுக்கு வழங்கப்பட்டன. மதீனா நகரிலுள்ள மன்னர் பஹ்த் அச்சகத்தில் இக் குர்ஆன் பிரதிகள் அச்சிடப்பட்டன.

புனித குர்ஆன் பிரதிகளை விட குர்ஆன் வசனங்களை உள்ளடக்கிய டேப்புகள், மார்க்க நூல்கள் ஆகியனவும் ஹஜ் யாத்திரிகர்களுக்கு வழங்கப்பட்டன. மினாவில் பெரும் எண்ணிக்கையில் ஹஜ் யாத்திரிகர்கள் அரபா செல்வதற்காக கூடியுள்ளனர்.

கடும் வெப்ப காலநிலைகளில் மினாவில் கூடாரங்களுக்கு வெளி இடங்களிலும் வீதிகளிலும் ஹஜ் யாத்திரிகர்கள் நிரம்பி வழிகின்றனர். வாகனப் போக்குவரத்தும் நெரிசல்களும் அதிகளவில் காணப்படுகின்றது. (அ-2)

# எட்டு கைகளை கொண்ட பெண் தெய்வம் கண்டுபிடிப்பு

(திருகோணமலை)

உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத மிகவும் அபூர்வமான 8 கைகளைக் கொண்ட பெண் தெய்வம் ஒன்றின் சிலை திருகோணமலை லிங்கபுரம் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சிலையானது லிங்கபுரம் பிரதேசத்தில் சிறிய ஆலயம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளதுடன் இதனை தமிழ், சிங்கள மக்கள் வழிபட்டும் வருகின்றனர்.

இந்தச் சிலை சுமார் 30 வருடங்களுக்கு மேலாக குறித்த ஆலயத்தில் இருந்து வருவதாகவும் காட்டில் இருந்து எடுத்து வரப்பட்டு அது ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. எனினும் இதன் தொல்பொருள் பெறுமதி குறித்து அங்குள்ள மக்கள் அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# விசுவமடு ம. வித்தி மாணவர்கள் நேற்றைய தினம் நடைபவனி

(ஆனையிறவு)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பை மேம்படுத்தும் நோக்கில் விசுவமடு மகா வித்தியாலய மாணவ, மாணவிகள் தமது பாடசாலையில் இருந்து விசுவமடு திருச்சபை வரை சுலோக அட்டைகளை ஏந்தியவாறு நடைபவனி ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொண்டனர்.

இவ்வாறு காலை 10 மணியில் இருந்து 11 மணி வரை மேற்கொண்ட நடைபவனியின் போது தமது சுலோக அட்டைகளில் கைகளுக்கு அழகு தருமாறு வளையல்கள் அல்ல புத்தகங்களே, மனிதன் மனிதனாக வாழ நூல்களே நல்ல நண்பர்கள், பெற்றோர்களே முதலில் நீங்களும் வாசியுங்கள் இளம் பிள்ளைகளையும் வழிப்படுத்துங்கள், நாளைய உலகின் நாயகர்கள் நீங்களே இன்றே விரையுங்கள் வாசியுங்கள், வாழ்க்கையில் மேம்பட்டிட இன்றே வாசியுங்கள், தினமும் வாசியுங்கள் வாழ்க்கையில் முன்னேறுங்கள் ஒக்டோபர் மாதம் மட்டுமல்ல ஆண்டுகள் முழுமையுமே வாசிப்பு ஆண்டுகள் ஆகட்டும் போன்ற சொற்றொடர்களை ஏந்தியவாறு நடைபவனியில் ஈடுபட்டனர்.

மேற்குறித்த மாணவ, மாணவிகள் மேற்கொண்ட 3 கிலோமீற்றர் தூர நடைபவனியை விசுவமடு மகா வித்தியாலய நூலக மேம்பாட்டு குழுவினர்ஏற்பாடுசெய்திருந்தனர். (அ-3-264)

# மரநடுகை செயற்றிட்டம் நவம்பர் 15 ஆம் திகதி!

இந்த வருடம் தேசத்திற்கு நிழல் தேசிய மரநடுகை செயற்றிட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், மாகாண சபைகள், மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களிலும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நவம்பர் 17 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 65 ஆவது பிறந்த தினத்தன்று 10 இலட்சம் மர நடுகை திட்டத்துடன் இந்த தேசத்திற்கு நிழல் தேசிய மரநடுகை செயற்றிட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இதன் வெற்றியால் இதனை கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தொடர்ந்தும் ஒரு தேசிய வருடாந்த நிகழ்வாக மர நடுகை திட்டத்தை அமுல் நடாத்த உத்தேசிக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா வழங்கிய யோசனைக்கமைய அமைச்சரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

# ஆபாச இணையத்தளங்களை முடக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை இளைஞர், யுவதிகள் தோன்றும் 51 ஆபாச இணையத்தளங்களை முடக்குமாறு சிறுவர் பாதுகாப்பு சபை, நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை இளைஞர், யுவதிகள் தோன்றும் 51 ஆபாச இணையத்தளங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த இணையத்தளங்களை முடக்கி விடுமாறு பத்தரமுல்லவில் அமைந்துள்ள விசேட சிறுவர் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. குறித்த இணையத்தளங்களை முடக்குவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைவாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என விசேட சிறுவர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ-2)

# கண்டாவளை பிரதேச செயலகம் வெள்ளத்தில் மிதக்கும் நிலை

## மக்கள் சுட்டிக்காட்டு

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலகத்தை சுற்றி வெள்ளம் நிரம்பியுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மேற்குறித்த பிரதேச செயலகம் அமைந்துள்ள காணி, வயற்காணி என்பதால் மழை நீரானது சுற்றிவர நிரம்பி காணப்படுவதுடன் நடை பாதையிலும் வெள்ளம் ஊடறுத்துப் பாய்கின்றது.

இவ்வாறு பள்ளமான காணியில் பிரதேச செயலகம் அமைந்துள்ளது என்ற காரணத்தால் புளியம்பொக்கணைச் சந்தியில் மேற்குறித்த பிரதேச செயலகத்திற்குரிய கட்டடம் அமைப்பதற்கு காணி ஒதுக்கப்பட்டும் இன்னமும் கட்டடம் அமைக்கப்படவில்லை.

இவ்வாறு காணி ஒதுக்கப்பட்ட இடத்தில் வெகு விரைவாக கட்டடம் அமைக்கப்படாதுவிடின் அனைவரும் வெள்ளத்தில் மிதக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கடந்த வருட மழையின் போதும் இவ்வாறு வெள்ளத்தால் அவதியுற வேண்டிய நிலை காணப்பட்டது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு காணி ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய கட்டடத்தை அமைத்து பிரதேச செயலகம் செயற்படுவதற்கு உதவ முன் வர வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

# கோட்டை நீதிமன்றில் பாம்புக்கு வாதாட்டம்

இரவு விடுதியொன்றில் வெள்ளைநிற நாகபாம்புடன் நடனமாடிய யுவதிக்கு அந்தப் பாம்பைக் கொடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் நவம்பர் 15 ஆம் திகதி தீர்ப்பு வழங்குவதற்கு கொழும்பு,கோட்டை நீதவான் நீதிமன்றம் தீர்மானித்தது.


கொள்ளுப்பிட்டி இரவு விடுதியொன்றில் பாம்புடன் நடனமாடிய 25 வயதான நிரோஷா விமலரத்ன திலானிக்கு பாம்பைக் கொடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பிலேயே தீர்ப்பு வழங்கவிருப்பதாக கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் கனிஷ்ட விஜேரத்ன அறிவித்தார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரிக்கப்பட்ட போது கொள்ளுப்பிட்டி பொலிஸார் பாம்புக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை.

இந்நிலையில் குற்றச்சாட்டுக்கள் ஏதும் இருப்பின் அதனை முன்வைக்குமாறு நீதவான் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் நிரோஷா விமலரத்ன திலானி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சிஹர்ஷகுலரத்ன, பாம்பு விஷ ஜந்துகள் வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதனை வளர்ப்பதற்கு தடை இல்லை என்பதுடன் அந்தப் பாம்பின் மீது தனது தரப்பைச் சேர்ந்தவர் அன்பு செலுத்துகிறார். ஆதலால் அந்தப் பாம்பை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.


அதற்கு மறுப்புத் தெரிவித்த பொலிஸார் செல்லப்பிராணியாக நாய், பூனைகளை வளர்ப்பதைப் போன்று பாம்பை மேற்படி பெண் செல்லப்பிராணியாக வளர்த்து வருகிறார் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார். (அ-2)


யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாவட்ட புகைத்தல் கட்டுப்பாட்டு குழுவினரால் நடத்தப்பட்ட சித்திர மற்றும் கட்டுரை போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சான்றிதழ் வழங்குவதையும் சித்திரக் கண்காட்சியினை மாணவர்கள் உள்ளிட்ட பலர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வரலாற்றுச் சக்கரம் பின்னோக்கி சுழல்கிறதா ?



## 25 ஆண்டுகள் பின்னோக்கி... 1987யும் கடந்து நிற்கிறோமா ?

திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் எதையும் செய்யும்போல தெரிகிறது.

திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதில் அரசாங்கத்தின் தலைவர்கள் எதிர்நோக்கியதைப் போன்ற சிக்கலான பிரச்சினையொன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதுவரை வேறெந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதிலும் எதிர்நோக்கியதில்லை. இது அரசாங்கத்தின் சில தலைவர்களை விரக்திக்கே இட்டுச்சென்றுள்ளது போலும். இந்தச் சட்ட மூலத்தை நாடாளமன்றத்தில் சமர்ப்பிக்குமுன் அதற்கு மாகாண சபைகளின் அனுமதியை பெறவேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதும் அதன்படி மாகாணசபைகளின் அனுமதியை பெறவதற்காக வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை இல்லாததால், எழுந்துள்ள சர்ச்சைக்குரிய நிலைமையுமே அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையாகும். இதனால், மாகாண சபைகளையே ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நிலைக்கு சில தலைவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனை நேரடியாக கூறியவர் எப்போதும் சுற்றிவளைக்காமல் பேசும் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவே. அண்மையில் ஆங்கில பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியொன்றின்போது மாகாணசபைகளைத் தோற்றுவித்த 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை தாமதமின்றி இரத்துச் செய்யவேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

13வது அரசியலமைப்புத் திருத்தம் போருக்கு பின்னாலான அபிவிருத்தியை தடுப்பதாகவும் அவ் அபிவிருத்தியை தொடர்ந்தும் தடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடமளிக்க முடியாது என்றும் கூறிய அவர், பேட்டியின் ஒரு கட்டத்தில் திவிநெகும சட்டமூலத்திற்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்புகளை தனித்து கவனத்தில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் கூறியிருந்தார். 13வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக அவர் குரல் எழுப்புவதற்கு திவிநெகும பிரச்சினையே அடிப்படைக்காரணம் என்பது இதனால் புலனாகிறது.

கோத்தபாய ராஜபக்ச ஓர் அர சாங்க அதிகாரி. தாம் அரசியல் விடயங்களை பகிரங்கமாக ஆராய்வது முறையல்ல என்ற பிரச்சினை எழலாம் என்பதால் தாம் இங்கே அரசியல் பேசவில்லை என்றும் அவர் அந்தப் பேட்டியின்போது கூறியிருக்கிறார்.

கோத்தபாய ராஜபக்ச இதற்கு முன்னரும் அதிகாரப் பரவலாக்க முறையை பலப்படுத்த வேண்டும் என்ற கருத்துக்கு எதிராக கருத்து வெளியிட்டிருக்கிறார். இந்தியாவை தளமாகக்கொண்ட ஹெட்லைன் டுடே செய்திச் சேவைக்கு கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் அளித்த பேட்டியொன்றின்போதும் அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் தற்போதைய நிலைமைக்கு அப்பால் செல்வதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிது என அவர்கூறினார்.

ஒன்றாய் வாழ்வதற்கு தற்போதைய அரசியலமைப்பு தலைக்கும் மேல் போதுமானது என்றும் இதற்கு மேல் எதுவும் வேண்டும் என்று தாம் நினைக்கவில்லையென்றும் அவர் அதில் கூறியிருந்தார். ஆனால், இப்போது அவர் தற்போதைய அதிகாரப்பரலாக்கல் முறையையும் இரத்துச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.

அதனை வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது தூக்கிப் பிடித்துக் கொண்டுள்ளன.

அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, ஜாதக ஹெல உறுமய போன்ற கட்சிகளும் தேசபக்த தேசிய அமைப்பு போன்ற அமைப்புகளும் இப்போது 13வது அரசியலமைப்புற திருத்தத்தை ரத்துச் செய்யவேண்டும் என்று அறிக்கைவிடத் தொடங்கியுள்ளன. 13வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வீரவன்ச இப்போது கூறிவருகிறார்.

இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவென்றால் இந்திய தலைவர்களின் அழைப்பின்பேரில் இம்மாத ஆரம்பத்தில் இந்தியாவுக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுகுழு புதுடெல்லியில் இருக்கும்போதேதான், பாதுகாப்புச் செயலர் 13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவரது கருத்தை இந்தியத் தலைவர்கள் எவ்வாறு புரிந்து கொண்டார்களோ தெரியாது. ஏனெனில் இலங்கை தலைவர்கள் இதுவரை இந்திய தலைவர்களோடு கூறியவற்றுக்கு முரணாகவே கோத்தபாய ராஜபக்சவின் கருத்து அமைந்துள்ளது. இந்திய தலைவர்களும் இலங்கைத் தலைவர்களும் சந்தித்துக்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இங்கையின் இனப்பிரச்சினை ஆராயப் பட்டுவருகின்றது. அவ்வப்போதெல்லாம் இலங்கையில் தற்போது அமுலில் உள்ள அதிகாரப்பரவலாக்கல் முறை பலப்படுத்தப்படவேண்டும் என இந்திய தலைவர்கள் வலியுறுத்துவார்கள். இலங்கைத் தலைவர்களும் இணக்கம் தெரிவிப்பார்கள்.

தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் இவ்வாறு இந்த விடயத்தில் வாக்குறுதியளித்து வருவதாக இந்தியாவே இந்தவருட ஆரம்பத்தில் சுட்டிக்காட்டியிருந்தது. இவ்வருடம் ஜனவரி மாதம் 16-19 ஆம் திகதிவரை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா இலங்கை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது இலங்கை வெளியுறவு அமைச்சர் 13வது அரசியலமைப்பு திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பரவலாக்கல் துறையில் முன்னோக்கிச் செல்வதற்கான தமது ஆர்வத்தை இலங்கை அரசாங்கம் பலமுறை இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளதாக கூறியிருந்தார்.

தாம் அன்று காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்ததாகவும் அவரும் இதை வலியுறுத்தியதாகவும் அவர் அந்தச் செய்தியாளர் மாநாட்டின் போது கூறினார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அப்போதும் வழமையான வலியுறுத்தல்களையும் உறுதிப்பாடுகளையும் இருசாராரும் வழங்கினர். இது போன்று ஐ.நா. பொதுச்சபை, மனித உரிமைப் பேரவை போன்ற வற்றிலும் இலங்கை தலைவர்கள் அதிகாரப் பரவலாக்கல் முறையை பலப்படுத்துவதாக கூறிவந்தனர். அண்மையில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளிலும் அதிகாரப் பரவலாக்கல் முறை பலப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த சிபார்சுகளை அமுலாக்குவதாகவே சர்வதேச சமூகத்திற்கு கூறிவருகிறது.

போர்முடிவடைந்த உடன் 2009 ஆம் அண்டு மே மாதம் 24 ஆம்திகதி ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். 26ஆம் திகதி அவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர். அதிலும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஓரிருவாரங்களுக்கு முன்னரும் ஐ.நா.செயலாளர் நாயகம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என மீண்டும் கூறியிருந்தார்.

இந்தயா 13வது அரசியல் அமைப்புத்திருத்தத்தோடு நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளது. இந்தியா 1987ஆம் ஆண்டு தமது விமானப்படை மற்றும் கடற்படை அகியவற்றின் பலத்தைக் காட்டி ஏற்படுத்திய நெருக்குவாரத்தின் விளைவாகவே ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனவின் தலைமையிலான இலங்கை அரசாங்கம் அன்று 13வது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவர இணங்கியது. சுருக்கமாக இந்தியாவே 13வது அரசியலமைப்பு திருத்தத்தை அறிமுகப் படுத்தியது எனலாம்.

இந்தப் பின்னணியில்தான் 13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரான குரல் வலுப்பெற்று வருகிறது. எனவே உத்தியோக பூர்வ மாக இலங்கை அரசாங்கம் 13வது அரசியலமைப்புத் திருத்தம் என்ற விடயத்தில் என்ன செய்யும் என்பது பலரது கேள்வியாக இருக்கிறது. ஐ.நா.மனித உரிமை பேரவையில் பல சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் அரசாங்கம் 13வது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்ய முன்வருமா என்பது கேள்விக்குறியே.

அவ்வாறாயின் மேற்கூறிய நெருக்குவாரங்களின் காரணமாக அரசாங்கம் அதிகார பரவலாக்கல் முறையை பலப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்குமா என்று ஒருவர் கேள்வியெழுப்பலாம். அதுவும் நடக்காது. முதலாவதாக அரசாங்கத்தின் தலைவர்கள் இயல்பாகவே அதிகார பரவலாக்கலை விரும்பாதவர்களாவர். உலகுக்குத் தெரியவே அவர்கள் அதைப்பற்றி அடிக்கடி குறிப்பிட்டு வருகிறார்கள். மறுபுறத்தில் பெரும்பான்மை சமூகத்திற்குள் இருந்து அதிகார பரவலாக்கல் முறைக்கு எதிராக பலமாக குரல் எழுப்பப்பட்டுவரும் நிலையில் அவர்கள் அதனையே சாதகமான நிலைமையாக பாவிப்பார்கள்.


எனவே மொத்தத்தில் தற்போதைய நிலைமை அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் *சும்மா* இருந்து காலத்தை கடத்த பொருத்தமான நிலைமையாகவே இருக்கிறது. அநேகமாக இந்த விடயத்தில் அரசாங்கம் தற்போதைக்கு எதுவும் செய்யாமல் சும்மா இருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

அதேவேளை 13வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக அரசாங்கத்திற்குள்ளிருந்தே தற்போது எழுந்துள்ள குரல்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை இனப்பிரச்சினை தொடர்பான உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் இழுக்கும் கருவியாகவும் அரசாங்கம் பாவிக்கலாம். அதாவது நீங்கள் வராவிட்டால் ஒன்றுமே இல்லாமல் போகலாம் என்ற செய்தியையும் 13வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிரான இந்த கொக்கரிப்புகள் மூலம் விடப்படுகின்றன.

-எம்.எஸ்.எம். ஜயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திக்கு தேசத்தந்தை பட்டம் வழங்க சட்டத்தில் இடமில்லை



## இந்திய உள்துறை அமைச்சகம் தகவல்

இந்தியாவின் விடுதலைக்காக போராடிய மகாத்மா காந்திக்கு தேசத்தந்தை என்ற பட்டம் அளிக்க அரசியல் சட்டத்தில் இடம் இல்லை என்று இந்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவை சேர்ந்த 6 ஆம் வகுப்பு மாணவி ஐஸ்வர்யா மகாத்மா காந்தி பற்றிய தகவல்களை தருமாறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அனுப்பியிருந்தார். அதில் மகாத்மா காந்திக்கு தேசத்தந்தை என்று பட்டம் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் மகாத்மாவை தேசத்தந்தை என்று முறைப்படி அறிவிக்க கோரி குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும் ஐஸ்வர்யா கடிதம் எழுதினார். இது தொடர்பாக மீண்டும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்தார். இதற்கு பதிலளித்த உள்துறை அமைச்சகம், மகாத்மா காந்தியை தேசத்தந்தை என குடியரசுத் தலைவர் அறிவிப்பது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் சாசன சட்டம் பிரிவு 18 (1) இன்படி யாருக்கும் எந்த விதமான பட்டத்தையும் அளிக்க இயலாது. கல்வித்துறை மற்றும் இராணுவத்தை சார்ந்தோருக்கு மட்டுமே பட்டங்களை கொடுக்க முடியும் என்று கூறியுள்ளது. (அ-2)

# துரோகத்திற்கு எதிரான சட்டம் ரஷ்யாவில் நிறைவேற்றம்

சதித்திட்டம் மற்றும் துரோகத்திற்கு எதிராக புதிய சட்டத்தினை தனது மேல்சபையில் ரஷ்யா நிறைவேற்றியுள்ளது. மேல்சபையில் நிறைவேறவுள்ள இந்த புதிய சட்டத்தின் மூலம் கிடைக்கும் சாட்சிகளை பொறுத்து மரணதண்டனையோ அல்லது அதற்கேற்ற தண்டனையோ குற்றவாளிக்கு வழங்கலாம்.

இந்த சட்டம் குறித்து ஐரோப்பிய யூனியன் கவலை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் இந்த சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளபடி தண்டனை வழங்குவது என்பது கொஞ்சம் கடினமாக இருக்கும்.

இதன் மூலம் வெளிநாட்டவரையும் 20 வருடங்கள் வரை கடுமையாக தண்டிக்கலாம். பன்னாட்டு பொதுமன்னிப்பு நிறுவனம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றுடனான செய்தி பரிமாற்றத்தையும் இந்த சட்டமூலத்தின் மூலம் குற்றமாக்க முடியும்.

இந்த சட்டம் பொதுமக்களின் முன்னேற்றத்தை கட்டுப்படுத்தி அவர்களுக்கு மன அழுத்தத்தை அதிகமாக்கும்.

மேலும் இந்த சட்டத்தின் மூலம் வெளிநாட்டு நிறுவனங்களுடன் நிதித்தொடர்பு வைத்துள்ளவர்களை குற்றவாளிகள் என்றும் நாட்டுக்கு எதிராக செய்திகள் வெளியிடும் வலைதளங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# முஸ்லிம்களுக்கும் புத்த மதத்தினருக்கும் இடையே மியன்மாரில் கலவரம் வெடித்தது

## ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு

மியன்மாரில் ரகின் மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களுக்கும் புத்த மதத்தினருக்கும் இடையே மீண்டும் கலவரம் ஏற்பட்டுள்ளது. மியன்மார் நாட்டின் வங்கதேச எல்லையையொட்டி அமைந்துள்ளது ரகின் மாகாணம். இம் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் வங்கதேசத்திலிருந்து குடிபெயர்ந்த 8 இலட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இவர்கள் மியன்மாரில் குடியுரிமை கேட்டு போராடி வருகின்றனர். சட்டவிரோதமாக குடிபெயர்ந்தவர்களுக்கு குடியுரிமை அளிக்க மியன்மார் அரசு மறுத்துவிட்டது. இதற்கிடையே கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களின் குடிசை களைதீவைத்துகொளுத்திவிட்டதாகசுறிபெரியஅளவில்கலவரம்மூண்டது. இதில்50பேர்பலியாகினர்.

இதையடுத்த மவுங்தா பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டது. பாதுகாப்பு கருதி ஏராளமான முஸ்லிம்கள் தங்கள் தாயகமான வங்கதேசத்துக்குள் தஞ்சம் அடைய முயன்றனர். அகதிகள் அதிக அளவில் வந்ததால் அவர்களை எல்லையோர காவல்படையினர் விரட்டியடித்தனர். இதற்கிடையே ரகின் மாகாணத்தின் சித்வி நகரில் பரவியுள்ள வன்முறையால் 600 வீடுகள் எரிக்கப்பட்டன. இந்த கலவரத்தில் ஐந்து பேர் பலியாகியுள்ளனர். நிலைமையை கட்டுப்படுத்த தற்போது இங்கு மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத் தப்பட்டுள்ளது. (அ-2)

# இராணுவ பணியில் பலியான நாய்க்கு வீரதீர விருது



ஆப்கானிஸ்தானில் இராணுவ வீரர்களுடன் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த அமெரிக்க நாய்க்கு வீரதீர செயலுக்கான பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைவீரர்கள் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுடன் மோப்ப நாய்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் ஐந்து மாத காலம் பணியில் ஈடுபட்ட தியோ என்ற நாய் தலிபான்கள் வைத்த வெடி குண்டுகளையும் வெடி மருந்துப்பொருட்களையும் கண்டுபிடித்தது. இதன்மூலம் அமெரிக்க வீரர்கள் பலர் உயிர் பிழைத்தனர். எனினும் கடந்தாண்டு மார்ச் மாதம் தலிபான்களின் தாக்குதலில் அமெரிக்க வீரர்களுடன் தியோவும் பலியானது.

வீரதீர செயல் புரியும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் அமெரிக்காவை சேர்ந்த பி.டி.எஸ்.ஏ. என்ற அமைப்பு சாதனை பதக்கம் வழங்கி கௌரவித்து வருகிறது. இந்த வகையில் தியோவுக்கும் விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த விருது 64 பிராணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 27 நாய்களும் 32 புறாக்களும் மூன்று குதிரைகளும் ஒரு பூனையும் அடக்கம். (அ-2)

# ரஷ்யாவிடமிருந்து 10 ஆயிரம் பீரங்கிகளை வாங்குகிறது இந்தியா

(மும்பை)

மும்பைத் தாக்குதல் சம்பவத்திற்கு பின் இந்திய இராணுவத்தின் பலம் குறித்து மிகப்பெரிய அளவில் சர்ச்சை கிளம்பியது.

ஏவுகணைகள் பற்றாக்குறை இருப்பதாகவும் அண்டை நாடுகளுடன் போர் ஏற்பட்டால் அதை சமாளிக்க போதிய வெடிபொருட்கள் இல்லை என்றும் முன்னாள் தளபதி வி.கே.சிங் பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இதையடுத்து இராணுவத்தை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வந்தது.

இந்நிலையில் ரஷ்யாவிடம் இருந்து ஆயிரத்து 200 கோடி ரூபா மதிப்பிலான 10 ஆயிரம் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை கூட்டத்தில் நேற்றைய தினம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதே போன்று கடந்த வர்ரம் 2 ஆயிரம் ரூபா கோடியில் ரஷ்யாவிடம் இருந்து 25 அயிரம் இன்வர் ரக ஏவுகணைகளை வாங்குவதற்கு மந்திரி சபை ஒப்புதல் அளித்தது.

ஏற்கனவே பிரான்சிடமிருந்து பீரங்கியை அழிக்க வல்ல மிலன் ரக ஏவுகணைகளை வாங்கியிருக்கிறது. அந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உள்நாட்டில் அத்தகைய ஏவுகணைகளை தயாரிக்கவும் உரிமம் பெற்றுள்ளது. இதன்மூலம் இந்திய இராணுவத்தினர் பலம் மேலும் அதிகரித்துள்ளது. (அ-2)

# மொராக்கோ நாட்டினர் 14 பேர் கடலில் மூழ்கி மரணம்

ஐரோப்பாவுக்குள் சட்டவிரோதமாக குடியேறச் சென்ற மொராக்கோ நாட்டினர் 14 பேர் கடலில் மூழ்கி பலியானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


ஆபிரிக்க நாடுகளிலிருந்து மக்கள் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறி வருகின்றனர்.

வடக்கு ஆபிரிக்க நாடான மொராக்கோ நாட்டிலிருந்து 70 பேர் கொண்ட குழுவொன்று படகின் மூலம் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவிற்குள் குடியேற சென்றுள்ளது.

மொராக்கோ கடல் எல்லையில் ஸ்பெயின் நாடு அருகே சென்ற போது அவர்கள் சென்ற படகு விபத்துக்குள்ளானது. இதில் 14 பேர் தண்ணீருக்கள் மூழ்கி பலியாகினர்.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு சென்ற ஸ்பெயின் கடற்படையினர் தத்தளித்துக் கொண்டிருந்த 17 பேரை உயிருடன் மீட்டு கரை சேர்த்தனர். ஏனையோர் விமானப்படை மூலம் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இதனால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (அ-2)

# ஜமைக்கா தீவு அருகே சண்டி புயல் தாக்குகிறது



அமெரிக்காவுக்கு தெற்கே கரீபியன் கடல் பகுதியில் அமைந்துள்ள ஜமைக்கா தீவு அருகே கடலில் சண்டி எனப் பெயரிடப்பட்டுள்ள சக்திவாய்ந்த புயல் மையம் கொண்டுள்ளது. அது ஜமைக்கா நோக்கி நகர்ந்து வருகிறது. புயல் எந்த நேரத்திலும் ஜமைக்காவை தாக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புயல் தாக்கும் போது மணிக்கு 125 கிலோமீற்றர் வேகத்தில் பயங்கர சூறைக்காற்று வீசும். 25 செண்ரி மீற்றர் அளவுக்கு பேய் மழை பெய்யும் என்று வானிலை இலாகா எச்சரித்து உள்ளது. எனவே பயங்கர நாசம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் கடலோர பகுதிகளில் வசிக்கும் 2 இலட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு உள்ளனர். மேலும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டு பிரதமர் எட்வர்டு இந்த புயல் ஹிரோஷிவாவில் வெடித்த அணுகுண்டை விட சக்தி வாய்ந்ததாக இருக்கலாம் என்று வர்ணித்துள்ளார்.

ஜமைக்கா நாட்டில் கடந்த 1988 ஆம் ஆண்டிலும் 2004 ஆம் ஆண்டிலும் பயங்கர புயல் காற்று தாக்கியது. அதில் நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். பக்கத்து நாடான டொமினிக்கன் குடியரசு ஹைதி நாடுகளையும் புயல் தாக்கலாம் என கருதி அங்கும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-2)

# பிரிட்டனில் போலியாக இயங்கிய 500 பல்கலைகள் மூடப்பட்டன

இங்கிலாந்தில் இயங்கி வந்த 500 இற்கும் அதிகமான போலி பல்கலைக்கழகங்களை அதிகாரிகள் அதிரடியாக மூடியுள்ளனர். இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல நாடுகளை சேர்ந்த மாணவர்கள் ஆயிரக்கணக்கில் படிக்கின்றனர். ஆண்டுதோறும் இவர்களின் வருகை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் இங்கிலாந்தில் இயங்கி வரும் பல்கலைக்கழகங்களின் எல்லை பாதுகாப்பு ஏஜென்சி மற்றும் குடியேற்றதுறை அதிகாரிகள் கடந்த 18 மாதங்களாக தீவிர ஆய்வு நடத்தி வருகின்றனர். அப்போது போலியாக இயங்கிய 500 இற்கும் அதிகமான பல்கலைக்கழகங்களை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளனர். மூடப்பட்ட பல்கலைக்கழகங்களை சேர்ந்த மாணவர்களுக்கு வேறு பல்கலையில் இடம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞானோதயம்

அன்னைமண் தன் துயில் நீத்தாள். *பொலபொல* வென்று புதிய பொழுதொன்று வந்து புலர்ந்தது.

*தகதக*வென்று தன் தங்கப் பொற்கிரணங்களை அள்ளி வீசிக்கொண்டு உதயசூரியன் கிழக்கே வந்துதித்தான். நீர் நிலைகளின் தாமரை மொட்டுக்கள் அவன் வரவு கண்டு மகிழ்ந்து *கலகல*வென்று தம் இதழ் விரிக்கத் தொடங்கின. பல நறுமண மலர்களும் கமகம வென்று நறுமணம் பரப்பி மலர்ந்து கொண்டிருந்தன. மரங்களின் பச்சை இலைகளில் ஒட்டிக்கொண்டிருந்த பனித்துளிகள் எல்லாம் *பளபள* வென்று வெண் முத்துக்களாய் மின்னி ஒளி வீசிக்கொண்டிருந்தன. ஆலய மணிகள் எல்லாம் *ஓம் ஓம்* என முழங்கி ஓங்காரம் எழுப்பின. இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று புள்ளினங்கள் எல்லாம் *சளசள* வென்று கதை பலபேசிப் பறந்தன.

இவையெல்லாம் இப்பூவுலகில் புது உயிர் ஒன்று வந்து பிறக்கப்போகிறது என்பதைக் கட்டியங்கூறும் மங்கல நிகழ்வுகள் போலவே தோன்றின.

அன்றுதான் பிறந்திருந்தது அந்தச் சின்னப்பூச்சியும்! அது பிறந்த விதம் யாருக்கும் தெரியாது. தனது சிறு மண்ணளவு கண்களை அகல விரித்து இவ்வுலகைப்பார்த்தது பூச்சி.

பரந்து கிடந்த பூமியும் விரிந்து கிடந்த ஆகாயமும் அகன்று கிடந்த கடற்பரப்பும் அடர்ந்து கிடந்த கொடுங்காடும் உயர்ந்து கிடந்த மலைத் தொடர்களும் எல்லாமே அதன் கண்களுக்குத் தெரிந்தன. இன்னும் பச்சைப்பசேல் என்றிருந்த வயல்வெளிகளும் மரம், செடி, கொடிகளும் அதன் கருத்தினைக் கவர்ந்தன.

இவையெல்லாம் யாருக்காக? எனக்காகத்தானே எனச் சொல்லி இளநகை செய்து இறும்பூ தெய்தியது அந்தச் சின்னப்பூச்சி.

தன் ஈரச் சிறகுகள் காயும் வரை காத்திருந்த அது மெல்ல நகர்ந்து... நிலத்தில் ஊர்ந்து... பின் எழுந்து பறந்தது. அன்று மலர்ந்த மலர் ஒன்றின் மீது வந்து அமர்ந்தது.

அந்தப் புத்தம் புதிய மலரில் நிறையவே தேன் ஊறியிருந்தது. தேனைக் கண்ட பூச்சியின் சிறு நாவிலும் நீர் ஊறியது. அதைக் குடிப்பதற்காக ஆசையுடன் அது தன் சிறு கொம்புகளை நீட்டியது. அந்தநேரம் பார்த்து தேனீ



ஒன்று திடீரென்று அவ்விடம் வந்து சேர்ந்தது.

*யார் அது?*

பூச்சியின் காதுகள் செவிடு படும்படியாக கத்திச் சத்தமிட்டு அதட்டியது தேனீ.

*நான் தான்* என்றது சின்னப் பூச்சி.

*நான் தான் என்றால்... நீயென்ன இந்த நாட்டுக்கே அரசனோ?*

*அரசனுமில்லை. ஆண்டியுமில்லை.*

*வேறு யார்?*

*நான் ஒரு சின்னப்பூச்சி.*

*இங்கு உனக்கு என்ன வேலை?*

*என் பசிபோக்க இந்தப் பூவில் தேன் குடிக்க வந்திருக்கிறேன்.*

*பூ எனக்குரியது. உடனடியாக இவ்விடம் விட்டுப்போய்விடு.*

*இயற்கையின் படைப்பு எல்லோருக்கும் சொந்தமானது.*

*பூக்களின் தேன் எல்லாம் தேனீக்கே சொந்தமானது. அறிந்துகொள் அற்பப்பூச்சியே.*

தேனீக்கு மட்டும்தான் தேன் சொந்தமானதென்று சாசனம் *எழுதி வைத்தவர் யார்?.*

*என்னைப் படைத்த இறைவன்.*

*என்னையும் அவர்தானே படைத்தார்.*

*இருக்கலாம்... ஆனால் பூ என் உடைமையானது.*

*எனக்கும் அதில் உரிமை உண்டு.*

*ஒன்றும் இல்லை. இக்கணமே இவ்விடம் விட்டு ஓடிவிட்டால் உயிர் பிழைப்பாய். இல்லையோ இருந்த இடம் தெரியாமல் தொலைந்து போவாய்.*

சின்னப்பூச்சி மௌனமாகியது.

தேனீயுடன் நேருக்கு நேர் நின்று போராடி வெல்லும் உடல் வலிமை தனக்கு இல்லை என்பது அதற்குத் தெரிந்திருந்தது. அதனால் மெல்ல அப் பூவை விட்டு விலகிச் சென்று ஒரு புல் நுனியின் மேல் அமர்ந்து கொண்டது. இந்த வானமும், பூமியும்- காடும், மலையும்- கடலும், வயலும்- பூவும், கனியும் எதுவுமே எனக் குச் சொந்தமானதில்லையா? இப்படி அது தன்னைதானே கேட்டுக் கொண்டது. தன் நிலை குறித்து அது மிகவும் வேதனையடைந்தது. நெடுநேரமாய் தலையைக் குனிந்தி ருந்தபடி நீண்ட சிந்தனையில் ஆழ்ந்திருந்தது அந்தச் சின்னப்பூச்சி.

தேனீ வெற்றிக்களிப்புடன் பூவைச்சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரமிட்டது. பின்பு பூவின் மேல் போய் இருந்தது. தன் இரு கொம்பையும் நீட்டி தேன் அருந்தத் தொடங்கியது.

அந்தநேரம் பார்த்து அவ்விடம் நோக்கி எங்கிருந்தோ ஒரு சிட்டுக்குருவி பறந்து வந்தது. யாரும் எதிர்பாராத விதமாய் தேனீயைப் பட்டென்று கௌவிப் பறந்து போனது.

சின்னப்பூச்சி இவற்றையெல்லாம் கண்கொட்டாமல் கவனமாய்க் பார்த்துக் கொண்டிருந்தது.

*ஓ... என்ன விந்தை இது? எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும்* என்னும் உண்மையி தாமோ? மின்னல் போல் வந்து மறையும் இவ்வுலகின் உயிர் வாழ்வில் யாருக்கும் ஏதும் சொந்தமானதில்லை. இவ்வுலகில் எவருமே நிலையாக உயிர் வாழ்ந்ததுமில்லை. இப்படி தனக்குள் தானே சொல்லித் தெளிந்து கொண்டது அந்தச் சின்னப் பூச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணு நிலையம் குறித்து அரசுக்கு அக்கறை இல்லை

## அதனால் ஏற்படும் இறப்புக்கு இழப்பீடு கொடுக்க யோசிக்கிறது





இந்தியாவின் தென்பிராந்தியத்தில் அமைக்கப்பட்டு வரும் அணு உலையில் விபத்து இடம்பெற்றால் வடமாகாணம் முழுவதுமே பாதிப்படையும் என மக்கள் போராட்ட இயக்கம் எச்சரித்துள்ளது.

இந்தியாவின் கூடங்குளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும் அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள் போராட்ட இயக்கம் யாழ். நகரில் நேற்றைய தினம் துண்டுப் பிரசுரப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

இதில் அவர்களினால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் தென்பிராந்தியத்தில் அணு உலை அமைக்கப்பட்டு வருகின்றது.

இலங்கைக்கு அண்மையிலேயே அமைக்கப்படுகின்றது. அணு உலையில் வெடிப்போ கசிவோ அல்லது வேறு ஏதாவது ஆபத்தோ ஏற்படும் போது அந்த கதிர்வீச்சு இலங்கைக்கும் பரவக்கூடும். காற்று, கடல், நீர், பறவைகள் மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் ஊடாகவும் இங்கு வரமுடியும்.

அப்படி ஒரு நிலையேற்பட்டால் நாம் செத்து மடிய நேரிடும் .

இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஆய்வுகளுக்கு ஏற்ப இந்தியாவில் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் வடமாகாணம் முழுமையாகவும் புத்தளம், திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்படும்.

இது தீடீர் மரணத்தில் தொடங்கி புற்றுநோய் போன்ற உயிர்க் கொல்லி நோய்களை உண்டாக்குவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் பிறக்கவிருக்கும் பிள்ளைகளும் அங்கவீனர்களாக பிறக்கக்கூடிய பயங்கரமான நிலையை உருவாக்கும். இவ்வாறான ஆபத்து கண்ணெதிரே இருக்கும் போது அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றது. இந்த அழிவை நிறுத்துமாறு இந்தியாவிடம் கேட்கவில்லை. மாறாக இவ்வணுவுலையில் அழிவு ஏற்படும் பட்சத்தில் மக்களை காப்பாற்றுவது என்று பேசுவதற்கு பதிலாக மனிதர்கள் இறந்தால் இழப்பீடு எவ்வளவு கிடைக்கும் என்றே பேசியிருக்கிறார்கள்.

எங்களது மரணத்தில் பணம் தேடுவதற்கே அரசாங்கம் தயாரகின்றது.

இந்தியாவிடமிருந்து கிடைக்கும் வரப்பிரதாசங்களை எண்ணி எதிர்க்கட்சியில் இருக்கும் எந்தவொரு அரசியல்வாதியும் இந்தப் பிரச்சினையில் வாய் திறக்கவே இல்லை.

இந்தியா கோபித்து கொள்ளும் என்ற பயத்தில் மக்களுக்கு விளக்கமளிப்பதுமில்லை.

இந்த நயவஞ்சகர்களை நம்பி ஏமாந்து போகாமல் எமது உயிர்களை பாதுகாத்து கொள்ள நாம் தயாராக வேண்டும்.

இவ்வணுவுலைக்கு எதிராக தென்னிந்திய மக்கள் போராடி வருகின்றார்கள். நாங்களும் அவர்களோடு சேர்ந்து போராட வேண்டும்.

நீண்டகாலத்திற்கு பின்னர் நாம் எதிர்கொள்ளும் மிகப் பெரும் ஆபத்துக்காய் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து இதனை நிறுத்துமாறு இருஅரசினையும் வலியுறுத்துவோம் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் இத்துண்டு பிரசுரப் போராட்டத்தில் கொழும்பிலிருந்து வந்திருந்த திமுது ஆட்டிக்கல எஸ்.கே.சுபசிங்க உட்பட மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்கள் 15 பேர் வரையில் கலந்து கொண்டிருந்தனர். பொலிஸாரும் வழமைக்கு மாறாக பாதுகாப்பு பணியில் குவிக்கப்பட்டிருந்தனர். (அ-4)

# வாழ்வெழுச்சித்திட்டம் நான்காம் கட்டம் ஆரம்பம்

திவிநெகும (வாழ்வின் எழுச்சி) வீட்டுத் தோட்ட செய்கையின் நான்காம் கட்டத்தின் ஆரம்பநிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெரியகுளம் பகுதியில் பெரியகுளம் கமக்கார அமைப்பின் தலைவர் க.சந்திரகுமாரன் தலைமையில் இடம்பெற்றது.

இத்திட்டத்தின்கீழ் விதைகள் மற்றும் பயிர்கள் பயிரிடும் நிகழ்வு இடம்பெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் திவிநெகும திட்டத் தின் மூலம் நாடளாவிய ரீதியில் வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கான விதைகள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகவே நேற்று முன்தினம் இந்த ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பெரியகுளம் கிராம சேவகர் எஸ்.சேகர், பெரியகுளம் பிரதேச இராணுவ பொறுப்பதிகாரி லெப்டினன் வாசன, கிராம மட்ட கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விதைகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

(அ-3-263)

# எம்.பிக்கள் எல்லோரும் நேர்மையானவர்களல்ல

## அமைச்சர் குமார வெல்கம தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 100 வீதம் நேர்மையானவர்கள் எனக் கருத முடியாது என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மத்துகம தொடங்தொட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த தேர்தல் முறைமையின் அடிப்படையில் நாடாளுமன்றம் செல்ல வேண்டுமாயின் குறைந்த பட்சம் 500 இலட்சம் ரூபா தேவை. பணம் செலவழிக்காது நாடாளுமன்றத்திற்கு செல்வது கனவாகவே அமையும்.

நாடாளுமன்ற உறுப்பினர்ளுக்கு வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்று கிடைக்கின்றது. ஒரு சிலரைத் தவிர இந்த அனுமதிப் பத்திரத்தை அநேக நாடாளுமன்ற உறுப்பி னர்கள் விற்பனை செய்துள்ளனர்.

150 இலட்சம் ரூபா அளவிற்கு செய்து தேர்தல் காலத்தில் பட்ட கடன்கள் அடைக்கப்படும். நானும் இதனையே செய்கின்றேன்.

ஜே.ஆர். ஜயவர்த்தனவின் தேர்தல் முறையினால் அதிகளவு பணத்தை செலவிட நேரிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-4)




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

அருள்மிகு ஸ்ரீவித்தக விநாயகர், முடிமன்னர் பைரவர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா

மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

| கர்மாரம்பம் | கும்பாபிஷேகம் |
|---|---|
| 26.10.2012 | 28.10.2012 |
| வெள்ளிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
| காலை 9.45 | காலை 9.30-11.00 |
| மணிக்கு | வரை |

கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு
ஆகம கிரியாஜோதி, அலங்கார பூஷணம்
சிவஸ்ரீ மு.சுப்பிரமணி சுந்தரராஜக்குருக்கள்,
சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்கநாதக்குருக்கள்
(வடக்கம்பரை அம்மன் தேவஸ்தான பிரதமகுரு)

(சி/1387)


# இலஞ்சம் பெற்ற பொலிஸ் தற்காலிக பணி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் சாரதியிடம் இலஞ்சம் பெற்ற யாழ்.போக்குவரத்து பொலிஸார் ஒருவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள் ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

ஒன்றரை மாதத்திற்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையின் வாகனமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் திடீர் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் இரு தரப்பினரும் சமாதானமாக செல்வது என்று தீர்மானித்ததோடு பிரதேசசபை வாகனத்தின் சேதத்தை பிரதேசசபை நிதியிலிருந்து பெறுவதற்கான போக்குவரத்து பொலிஸாரிடம் விபத்து அறிக்கை பத்திரம் கோரப்பட்டது.


எனினும் அதனை கொடுக்க மறுத்த பொலிஸார் மோட்டார் சைக்கிள் உரிமையாளரின் சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் வாங்கி வைத்துள்ளதோடு நீதிமன்றிலும் வழக்குப் பதிவு செய்யாமலும் இழுத்தடிப்பு செய்துள்ளனர்.

தனது சாரதி அனுமதிப்பத்திரத்தினை திரும்ப பெறுவதற்காக யாழ்.பொலிஸ் நிலையம் சென்ற மோட்டார் சைக்கிளின் உரிமையாளரிடம் விபத்தில் சம்பந்தப்பட்ட பொலிஸார் ஒருவர் 3 தடவைகள் யாழ்.நகரில் உள்ள உணவகம் ஒன்றில் உண்டு மகிழ்ந்துள்ளார்.

இதன் பிறகாவது தனது சாரதி அனுமதிப்பத்திரத்தினை தராத பொலிஸார் தொடர்பில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேராவிடம் தெரியப்படுத்தப்பட்டதனையடுத்து இப் பணி நீக்கம் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் தனக்கு அதனை உடனடியாக தெரியப்படுத்த வேண்டும் எனவும் பொலிஸாருக்கு சாரதிகள் இலஞ்சம் என்ற பெயரில் எதனையும் கொடுப்பதை நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று வடமாகாண பிரதம செயலாளரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண பிரதம செயலாளர் ஆர். விஜயலக்சுமி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்மட்ட குழுவினருடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: -என். குமார்)

# அரசு வறியவர்களின் காணிகளை தனியார்துறைக்கு வழங்குகின்றது

## அரஙச சாடுகிறார் சஜித் பிரேமதாச

(கொழும்பு)

அரசாங்கம் வறியவர்களின் காணிகளை தனியார் துறையினருக்கு வழங்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரச சொத்துக்களை தனியார்துறைக்கு தாரை வார்ப்பதில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார். இந்த முனைப்புக்களை முறியடிப்பதற்கு சிவில் சமூகங்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் நேரடியாக 16 ஆயிரம் விவசாய குடும்பங்களும் மறைமுகமாக 29 ஆயிரம் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றிலும் அதற்கு வெளியேயும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் கொடுக்கப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேர்தல் நடைபெற்ற காலத்தில் விவசாயிகளின் கடன்கள் இரத்து செய்யப்படுவதாக அறிவித்தபோதிலும் தேர்தல் முடிவடைந்த தன் பின்னர் வங்கிகள் கடனை செலுத்துமாறு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 13ஆவது திருத்தத்தை இரத்து செய்தால் அதற்கெதிராக கூட்டமைப்பு செயற்படும்

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அரசாங்கம் இரத்து செய்தால் அதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்கும் என தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே. துரை ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் உள்ள சில தரப்பினர் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என வெளியிட்டு வரும் கருத்துக்கள் தொடர்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கு ஓரளவு அதிகாரம் கிடைத்துள்ளது. இதன் மூலம் பிரதேசத்தில் உள்ள சிறுபான்மை இனத்தவரின் உரிமைகள் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை இரத்து செய்ய வேண்டும் எனக் கூறுமாயின் சிறுபான்மை மக்களின் உரிமைகள் மேலும் இல்லாமல் போய்விடும்.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் நாட்டின் நிரந்தர சுதந்திரத்திற்கு தடையாக இருப்பதாக அதனை எதிர்க்கும் அரசாங்கத்தில் உள்ள தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு ஆரம்ப காலம் முதலே தீர்வுகளை வழங்க உடன்படிக்கைகள் சைச்சாத்திடப்பட்டன .எனினும் அவை அனைத்தும் கழித்தெறியப்பட்ட வரலாறே இருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு காரணம் நாட்டில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளின் ஒரு தலைப்பட்சமான செயற்பாடாகும்.

தமிழர்களின் உரிமைக்காக எந்த அரசியல் தீர்வையும் வழங்கக்கூடாது என அவர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் குறித்து சர்வதேசம் ஏற்கனவே தனது கவனத்தை செலுத்தி வருகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்த விதத்திலும் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை இரத்து செய்ய இடமளிக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமெரிக்கா இலங்கைக்கு நட்டஈடு வழங்க வேண்டும்

அமெரிக்கா இலங்கைக்கு நட்டஈடு வழங்க வேண்டுமென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் ஈரான் மீது பிரயோகித்துள்ள பொருளாதார தடையினால் நட்பு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நட்பு நாடுகள் பாதிக்காத வகையில் தடைகள் விதிக்கப்பட வேண்டும் அல்லது அதற்கான நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் அமெரிக்காவிடம் கோரியுள்ளார்.

ஈரானிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாத காரணத்தினால் சப்புஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக இலங்கை பாரியளவு எரிபொருள் பிரச்சினையை எதிர் நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பாலியல் தொழிலுக்காக

# ஒலேய்யா முகாமில் இலங்கை பெண்கள் தடுப்பு?

வீட்டுப் பணிப்பெண்களாக இலங்கையில் இருந்து சவுதி அரேபியாவுக்கு சென்று ரியாத்தில் உள்ள ஒலேய்யா என்ற முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை பெண்களை பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அப்பெண்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வர்த்தகத்துடன் சிங்களவர் ஒருவர் தொடர்புபட்டுள்ளதாகவும் அப்பெண்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த முகாமில் வேறு நாடுகளை சேர்ந்த பெண்கள் உட்பட ஆயிரத்து 100 பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்கள் இரவு நேரங்களில் அழைத்துச் செல்லப்பட்டு சில தினங்களின் பின்னர் மீண்டும் முகாமுக்கு கொண்டு வந்து விடப்படுகின்றனர். அத்துடன் பெண்களுக்கு கடுமையான சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# கஞ்சாவுடன் புத்தளத்தை சேர்ந்த நபரொருவர் கைது

யாழ். நகரில் ஒரு கிலோகிராம் கஞ்சாவுடன் புத்தளவாசி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை கடந்த 20 ஆம் திகதி யாழ்.பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தலைமையில் இயங்கும் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புத்தளத்தினை சேர்ந்த நபர் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய ஒரு கிலோகிராம் 28 கிராம் நிறையுடைய கஞ்சாவினை விற்பனைக்கான தன்வசம் வைத்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் படி குறித்த கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

இவ்வாறான போதைப்பொருள் கடத்தல்கள் புத்தளத்தினைச் சேர்ந்த நபர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-4)


# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் தனராசன்

(முகாமையாளர், புளியங்கூடல் 09 ஆம் கிளை, ப.நோ.கூ.ச.ஊர்காவற்றுறை. பரம்பரை தர்மகர்த்தா, ஐயனார் ஆலயம், புளியங்கூடல்)



புளியங்கூடல் தெற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தனராசன் 24.10.2012 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் குணபூசணி தம்பதியினரின் அன்பு மகனும், மாலினியின் அன்புக் கணவரும் சிவனுஜன் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி, தரம் -7) பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற நமசிவாயம் மற்றும் திலகவதி தம்பதியினரின் மருமகனும், றோகினி (கனடா), இரகுநாதன் (ஜேர்மனி), கௌரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன் (கனடா), நிறஞ்சினி (ஜேர்மனி), சிவதுரை (ஜேர்மனி), அகிலன், கமலினி, கயலினி, அமுதினி ஆகியோரின் மைத்துனரும், இரகுநாதன் யோகானந்தன் ஆகியோரின் சகலனும், வினோதாவின் உடன்பிறவாச் சகோதரனும், அரிகரன், கஜனி, கேனுஜா, காருணியா ஆகியோரின் பெரிய தந்தையும், சாயிதன், சகிந்தன், நிலாவினி, குருசிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.10.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக் கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை
தொ.பே.இ.
0213008728,
0770343314

(836)

தகவல்:-
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அமைதியையும் மகிழ்ச்சியையும் பெற்றால் அவர்கள் பொறாமைப்படுவார்கள். இருந்தாலும் மகிழ்ச்சியாய் இரு.

—அன்னை தெரசா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நீங்கள் வளர்க்கப்பட்ட முறையில் கண்ட தவறு ஏதுமுண்டோ!

பயனுள்ள பொழுது போக்கு என்ற விடயம் குறித்துப் பலரும் கவனம் செலுத்துவதில்லை.

எனினும் ஒரு மனிதனுடைய உயர்விலும் தாழ்விலும் பொழுதுபோக்கு அம்சங்கள் செலுத்துகின்ற செல்வாக்கு காத்திரமானவை.

பொழுது போக்கு அம்சங்கள் பிழைத்து விடுகின்ற போது ஒழுக்க நடவடிக்கைகளும் பிழைத்து விடுகின்றன.

எனவே பெற்றோர் முதல் சமூகப் பொறுப்புள்ள அனைவரும் பிள்ளைகளின் பொழுது போக்கு தொடர்பில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

முன்பெல்லாம் பொழுது போக்கு அம்சங்கள் என்றவுடன் பத்திரிகை வாசித்தல், சிறுகதை படித்தல், வானொலி கேட்டல், விளையாட்டு, முத்திரை சேகரித்தல், வீட்டுத்தோட்டம் அமைத்தல் என்று மாணவர்கள் கூறிக்கொள்வர்.

அந்த காலத்தில் சிறுகதை வாசித்தல், பத்திரிகை படித்தல், வானொலி கேட்டல், விளையாட்டு என்ற நான்கு பொழுதுபோக்கு அம்சங்களும் மாணவர்களின் ஆற்றலிலும் ஆளுமையிலும் திறன்வெளிபாட்டிலும் பெரும்பங்கு வகித்தன.

இன்றைய வானொலிகளின் நிகழ்ச்சி நிரலில் தொலைபேசி உரையாடலை விட்டால் வேறு எதுவும் இல்லையென்று கூறலாம்.

தொலைபேசி உரையாடலில் இடம்பெறும் சிரிப்பு, கனைப்பு, சிலேடை மொழிப் பிரயோகம் என்பன யாவும் சேர்ந்து மாணவர்களிடையே ஒருவகையான விரச உணர்வுகளை ஏற்படுத்துகின்றன.

இதற்கு மேலாக கையடக்கத் தொலைபேசியும், இணையத்தளமும், தொலைக்காட்சி தொடர் நாடகங்களும் எங்கள் பிள்ளைகளின் பொழுது போக்கை அபகரித்து விட்டன.

இன்றைய கால பிள்ளைகளுக்கு ஆலயம் செல்ல – ஆண்டவனை வழிபட – தம்உறவுகளை சந்தித்து உரையாட எதற்குமே நேரமில்லை.

பாடசாலை, பின் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்லுதல் இப்படியே எங்கள் பிள்ளைகளை கட்டாயப்படுத்த அவர்கள் சுய சிந்தனை, சுய தேடல்,சுயஆற்றல்எதுவுமற்றவர்களாக–மனிதத்தை தொலைத்த மனிதர்களாக வாழ்கின்றனர்.

இத்தகைய நிலைமைகளின் எதிர்காலம் மிகவும் பாரதூரமானதென்பதை எவரும் மறந்துவிடலாகாது.

எங்கள் பிள்ளைகள் உயர்ந்தவாழ்வு வாழ வேண்டும்என்பதே எல்லாப்பெற்றோர்களினதும்எண்ணம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

ஆனால் அந்த எண்ணத்தை நிறைவேற்ற நாம் எடுத்துக்கொண்ட முறைகள் எல்லாவற்றையும் தவிடுபொடி ஆக்கிவிடுகின்றன.

எனவே உங்களுடைய வாழ்வு, உங்கள் பெற்றோர் உங்களை வளர்த்த முறை அவற்றில் ஏதேனும் கெடுதல் கண்டீர்களா? அப்படியாக அதில் கெடுதல் காணாவிடில் அந்த முறைகளை பின்பற்ற நீங்கள் ஏன் நினைக்கவில்லை?

உங்கள் வாழ்வு உயர்வானது. உங்கள் பெற்றோரை, பிறந்த ஊரை, உறவுகளை நேசித்த வாழ்வு உன்னதமானது. அந்த உன்னதத்தை தொலைத்து விடாதீர்கள். அதை உங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுங்கள். அவை தான் பிள்ளைகளை பிள்ளைகளாக்கும்.

# திவிநெகுமவிற்கு எதிராக கட்சி பேதமின்றி வாக்களியுங்கள்

## பாஸ்கரா கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி திவிநெகுமவிற்கு எதிராக தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவாக செயற்பட வேண்டிய காலமிது என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திவிநெகும சட்டமூலம் மாகாண சபைகளில் நிறைவேற்றப்பட்டு சிறுபான்மை தமிழ் மக்களுக்கு இக்கட்டான சூழ்நிலையில் எமது தலைவர் மனோ கணேசன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, சிறிதுங்க ஜயசூரிய, அசாத்சாலி உட்பட பதின்னான்கு மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் திவிநெகுமவிற்கு எதிராக மனுத்தாக்கல் செய்யப்பட்ட சூழ்நிலையில் நீதிமன்றத் தீர்ப்பின் பின் பாராளுமன்றம் செல்லும் போது அரச தரப்பு சார்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி எதிராக வாக்களிக்க வேண்டிய கடப்பாடும் தார்மீகப் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு.

மேலும்மேலும்வரலாற்றுத்தவறுகளை விட்டுக் கொண்டு சேதாரம் இல்லாத விட்டுக்கொடுப்பு சிறு சேதாரமான விட்டுக்கொடுப்பு என்று கதை சொல்லி எமது சிறுபான்மை இன இருப்பை இல்லாமல் செய்யாமல் எமது இருப்பை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பும் தாம் பிரதிநிதிப்படுத்தும் மக்களுக்கான உரிமையை இழக்காமல் செய்வதற்கான கடமையும் ஆகும்.

எனவே இதனின்று வழுவாமல் திவிநெகும சட்டமூலத்தை எதிர்த்து எமது மக்களின் உரிமையைக் காப்பாற்றுவது அரசு சார்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வரலாற்றுக் கடமையும் ஆகும் என அவர் குறிப்பிட்டார். (அ-8)

## குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து வருகிறது

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஏழு குளங்களின் நீர்மட்டம் மழையினால் உயர்வடைந்து வருகின்றது.

இதற்கமைய அக்கராயன்குளம் 7 அடி10 அங்குலம், இரணைமடுக் குளம் 9 அடி, கல்மடுக்குளம் 4 அடி 5 அங்குலம், கனகாம்பிகைக்குளம் 5 அடி 6 அங்குலம், பிரமந்தனாறுகுளம் 4 அடி 2 அங்குலம், புதுமுறிப்புகுளம் 6 அடி, வன்னேரிக்குளம் 3 அடி 6 அங்குலம் என நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளமையினால் குளங்களின் நீர்மட்டம் இவ்வாறு உயர்வடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-3,254)

## தனியார் பேருந்தில் சங்கிலி அபகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

தனியார் போக்குவரத்துப் பேருந்தில் பயணித்த பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

கச்சாயினைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவருடைய ஒரு லட்சத்து 75 ஆயிரம் பெறுமதியுடைய தங்கச் சங்கிலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கொடிகாமத்திலிருந்து யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றில் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உடனடியாக யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு பஸ் திருப்பப்பட்டு அனைவரும் சோதனைக்குட்படுத்தப்பட்ட போதும் சங்கிலித் திருடன் மாட்டவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

## முச்சக்கரவண்டி விபத்தில் குடும்பஸ்தர் பலி

(முல்லைத்தீவு)


மோட்டார்சைக்கிள்– துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பி.ப. 6 மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, வவுனியா புளியங்குளத்தில் இருந்து நெடுங்கேணி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார்சைக்கிள் எதிரே வந்த துவிச்சக்கரவண்டியுடன் மோதிய விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் நெடுங்கேணியைச் சேர்ந்த செ.சிவானந்தராசா (வயது 37) என்று மூன்று பிள்ளைகளின் தந்தையே தலையில் படுகாயமடைந்து உயிரிழந்தவராவார்.

இதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-3,267)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



என்னையே வழிபடுங்கள். என்னைவிட உயர்ந்தோர் யாரும் இல்லை. ஏனெனில் நான் மட்டுமே உயிர் கொண்டிருக்கிறேன். என்னிடமிருந்தே அனைத்து அம்சங்களும் தோன்றுகின்றன. என்னை நீங்கள் தேர்ந்தெடுக்கும் வடிவிலோ, வழியிலோ வழிபடுங்கள். ஆனால் ஒரு சமயத்தில் ஒரே ஒரு வடிவத்தையே வழிபடுங்கள். நினைவு கொள்ளுங்கள். ஒவ்வொரு முறையும் நாம் சந்தித்தபோது நான் உங்களுக்குத் துணைபுரியும் நோக்கத்தோடு கருணை கொண்டு உங்கள் வாழ்க்கையின் தர்மத்தைக் காண்பித்தேனேயொ ழிய உங்களைத் தண்டிப்பதற்கோ குற்றவாளி ஆக்குவதற்கோ நான் ஓர் நியாயாதிபதி ஸ்தானத்திலிருந்து உங்களை நோக்கியதில்லை.

## அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தென்கோவை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான மகா இராஜகோபுர அடிக்கல் நாட்டு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.45 மணி வரை நடைபெறவுள்ளது. (அ-3)

## யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் 87 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த வாரம் குற்றம் புரிந்த 87 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இதில்பிடியாணைபிறப்பிக்கப்பட்ட 23 பேரும் டெங்கு பரவும் விதமாக சூழலை வைத்திருந்த 24பேரும் மது போதையில் வாகனம் செலுத்திய 16 பேரும் மதுபோதையில்இடையூறுவிளைவித்த 8 பேரும் சட்ட விரோதமாக சாராயம் விற்ற 6 பேரும் பொது இடத் தில் மது அருந்திய 5 பேரும் சட்ட விரோதமாக மரம் ஏற்றிச் சென்ற 3 பெரும் பனை மரம் வெட்டிய குற்றம் கஞ்சா வைத்திருந்த ஒருவருமாக மொத்தம் 87 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### மின்னல் வேக மாற்றம்!



ஆன்மீக வாழ்வில் பேரின்பம் கிடைக்காமல் போனால் அதற்காகப் புலனின்ப வாழ்வில் திருப்தி கொள்ளக் கூடாது. இது அமுதம் கிடைக்காவிட்டால் சாக்கடை நீரை நாடிச் செல்வதற்குச் சமம்.

மாபெரும் வீரனே! உறக்கம் உனக்குப் பொருந்தாது. துணிவுடன் எழுந்து நில்.


உன்னை நீயே பலவீனன் என்று நினைப்பது உனக்குப் பொருந்தாது. நான் ஒரு வெற்றிவீரன் என்று எப்போதும் உனக்குள்ளேயே சொல்லிக் கொள். மின்னல் வேகத்தில் உனக்குள் புதிய மாற்றம் ஏற்ப டுவதைக் காண்பாய்.


கீழ்த்தரமான தந்திர முறைகளால் இந்த உலகத்தில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிடமுடியாது.

அதிர்ஷ்டதேவதை உனக்கு அருள்புரியட்டும் அல்லது புரியாமல் போகட்டும். ஆனால் நீ உண்மை என்னும் பாதையில் இருந்து அணுவளவும் பிறழ்ந்து போகாமல் இருப்பதில் கவனமாக இரு.

வாழ்வில் எந்த அளவுக்கு உயர நினைக்கிறாயோ அந்த அளவுக்கு கடுமையான சோதனைகளையும் நீ கடந்தாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாந்தோட்டையில் அண்மையில் நடைபெற்ற தேசிய ரீதியான மெய்வல்லுநர் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் 21 வயதுப் பிரிவினர் 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் 4.48.04 என்ற நேரத்தில் ஓடி முடித்து 5 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இம் முறை முதல்முறையாக 6 ஆவது இடம் வரை சென்று தேசிய ரீதியில் சான்றிதழ் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு இந்துவை அடக்கியது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி ஏ அணிக்கும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி ஏ அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலைகளில் 15 வயது பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான பிரிவு III இற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்று தொடரில் இரண்டாவது சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

அண்மையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன் கல்லூரி அணியும் மட்டக்களப்பு இந்துக்கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு இந்துக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு இந்துக்கல்லூரி அணி 25 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 57 ஓட்டத்தினைமாத்திரமே பெற்றுக்கொண்டது.



அதிகபட்சமாக அவ் அணி சார்பாக அ.அபிலாஸ் 24 பந்துகளுக்கு முகம் கொடுத்து 11 ஓட்டத்தினை பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் சென்ஜோன்ஸ் அணி சார்பில் எஸ்.பிரவீன்சன் 5 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 13 ஓட்டத்தினை விட்டுகொடுத்து 5 விக்கெட்டினை கைப்பற்றினார். எஸ் பிரகாசன் 2 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் ஜெ.கிசாந்துஜன் 3 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டினையும் ஜெ. சாரோன் லியோனி 2 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டினையும் எஸ்.ஜெனிபிளமின்2 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 1 விக்கெட்டினையும் கைப்பற்றினார்.

58 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்ஜோன் கல்லூரி ஏ அணி அவ் இலக்கினை 10 ஓவர்களில் 3 விக்கெட்டினை இழந்து பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ் அணி சார்பாக எஸ்.தேவப்பிரசாந் ஆட்டமிழக்காமல் 24 பந்துகளுக்கு முகம் கொடுத்து 20 ஓட்டத்தினையும் ஜெ.கிசாந்துஜன் 22 பந்துகளுக்கு முகம் கொடுத்து 12 ஓட்டத்தினையும் எம்.நிலோஜன் ஆட்டமிழக்காது 5 பந்துகளுக்கு முகம் கொடுத்து 12 ஓட்டத்தினை அதிக பட்சமாக பெற்றுக்கொண்டனர்.


பந்து விச்சில் மட்டக்களப்பு இந்துக்கல்லூரி அணி சார்பாக கே.சஜித் 2 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் ஜெ.லக்ஷன் 4 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் ஆர். தேனுரதன் 4 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

# அரையிறுதிக்கு முன்னேறியது மத்திய கல்லூரி

விபுலானந்த ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 67:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினால் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மோதியது.

ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதல் சுற்றில் 20:5 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் இரண்டாம் சுற்றில் 15:6 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் மூன்றாவது சுற்றினை 22:0 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் இறுதிச் சுற்றை 10:7 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்றது.



யா/புனித கென்றியரசர் கல்லூரி மாணவன் செல்வன் ஞானேஸ்வரன் அன்ரனிராஜ் 15 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம் பிடித்து உதைபந்தாட்டப் போட்டிக்காக ஜப்பான் சென்று போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார். இதனை கௌரவிக்கும் முகமாக கல்லூரி சமூகத்தினர் பாடசாலையின் பிரதான வீதியில் இரு மருங்கிலும் நிற்க பாண்ட் வாத்தியங்கள் முழங்க அதிபர் யோ. அ.யேசுதாஸ், அருட்சகோதரர் [illegible] பாடசாலை ஆசிரியர் குழாம், மாணவர்கள் இணைந்து மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு கௌரவித்தனைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு நுழைந்தது லயன்ஸ்



நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரின் இறுதிப்போட்டிக்கு தென்னாபிரிக்காவின் ஹைவெல்ட் லயன்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

டெல்லி டேர்டேவில்ஸ் அணிக்கும், ஹைவெல்ட் லயன்ஸ் அணிக்குமிடையில் இடம்பெற்ற அரை இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றதையடுத்தே ஹைவெல்ட் லயன்ஸ் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது கிங்ஸ்மீட், டேர்பனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி டேர்டேவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. டில்லி டேர்டேவில்ஸ் அணி சார்பாக அவ் அணியின் வழமையான தலைவர் மஹேல ஜெயவர்த்தன போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை. ரோஸ் ரெயிலர் அணியை வழிநடத்தினார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைவெல்ட் லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து139 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

முதலாவது விக்கெட்டை 34 ஓட்டங்களுக்கு இழந்த அவ்வணி ஒருகட்டத்தில் 10.4ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்று மெதுவான துடுப்பாட்டத்தையே வெளிப்படுத்தியிருந்தது.

எனினும் நீல் மக்கன்சி, குலாம் பேடி இருவரும் 7.2 ஓவர்களில் 59 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை திடப்படுத்தினர்.

துடுப்பாட்டத்தில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக குலாம் போடி 49 பந்துகளில் 50 ஓட்டங்களையும், நீல் மக்கன்சி 28 பந்துகளில் 46 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 19 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டில்லி டேர்டேவில்ஸ் அணி சார்பாக உமேஷ் யாதவ் 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அஜித் அகார்கர், மோர்னி மோர்கல், பவான் நெகி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

140 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது ஓவரிலேயே வீரேந்தர் சேவாக்கை இழந்த அவ்வணி, அதன்பின்னர் 35 ஓட்டங்களை இரண்டாவது விக்கெட்டுக்காகவும் 26 ஓட்டங்களை மூன்றாவது விக்கெட்டுக்காகவும் பகிர்ந்த போதிலும், அதன் பின்னர் விக்கெட்டுக்களை தொடர்ச்சியாக இழந்த தோடு, ஓட்டங்களையும் வேகமாகப் பெறத் தவறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் டில்லி டேர்டேவில்ஸ் அணி சார்பாக கெவின் பீற்றர்சன் 44 பந்துகளில் 50 ஓட்டங்களையும், டேவிட் வேர்ணர் 21 ஓட்டங்களையும், மோர்னி மோர்கல் 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏனைய எல்லா வீரர்களும் ஒற்றைப் படை ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக கிறிஸ் மொறிஸ் 4 ஓவர்களில் 7. ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஆரோன் பங்கிசோ 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், டிர்க் நன்னீஸ் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், தன் வீர், சைம்ஸ், பிறீரோரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஹைவெல்ட் லயன்ஸ் அணியின் நீல் மக்கன்சி தெரிவானார்.



## கால்ட்டன் கிண்ண கிரிக்கெட் போட்டி

கால்ட்டன் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு வவுனியா பொலிஸ் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை நடைபெறும் முதல் போட்டியில் யாழ்.மாவட்ட அணியும், கொழும்பு பிறவுண்ஸ் அணியும் மோதவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் கொழும்பு லசியன்ஸ் அணியும் மோதவுள்ளது என பயிற்றுவிப்பாளர் எ.ரமணன் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் போர்க்குற்...

இலங்கையில் யுத்தம் முடிபடைந்து 3 ஆண்டுகளுக்கு மேலாக காலம் நகர்ந்த போதும் ஐக்கிய நாடுகள் சபை தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாக வெளிப்படையாகக் கூறவில்லை.

எனினும் பிற அமைப்புக்களினதும் பொது மக்களின் வாய்மொழி சாட்சியங்களையும் வைத்தே அறிக்கைகளை விடுத்ததுடன், தம்மால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு அறிக்கையினையும் ஆதாரம் காட்டியது.

ஆனால், தற்போது முதல் முறையாக தம்மிடம் காணொளிகள் உள்ளிட்ட ஆதாரங்கள் இருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த ஆதாரங்களை அடிப்படையாக அடுத்தாண்டு நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை மீது அழுத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என ஐ.நா.வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த 2009-ம் ஆண்டு இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற இறுதியுத்தத்தின் போது 40,000த்துக்கும் அதிகமான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டமைக்கான காணொளி ஆதாரங்கள் இருப்பதாக சட்டத்தை மீறிய கொலைகள், யுத்த கால வன்முறைகள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பிலான ஐ.நாவின் நிபுணர் கிறிஸ்டொப் ஹெய்ன்ஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இறுதி யுத்தத்தில் மாத்திரம் 40,000ற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பிலான காணொளிகள் தம்மிடம் உள்ளன. அவை உண்மையானவை என்று நிபுணர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த காணொளிகள் இதுவரையில் சனல் 4 உள்ளிட்ட எந்த ஊடகத்திலோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரத்துக்கோ காண்பிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த காணொளிகளை எதிர்வரும் மனித உரிமைகள் மாநாட்டில் காண்பிக்க உத்தேசித்திருந்த போதும், இந்த மாநாட்டில் இலங்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்க உறுப்பு நாடுகளுக்கு 70 நொடிகளே வழங்கப்படவுள்ள நிலையில், அதனை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் காண்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தாம் அடுத்த ஆண்டுக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாடு தொடர்பிலேயே அவதானம் செலுத்துவதாகவும், இது இலங்கைக்கு பெரும் சவாலானதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இறுதியுத்தத்தின் போது ஐக்கிய நாடுகளின் பணிகள் தொடர்பில், அதன் சிரேஷ்ட உறுப்பினர் பெற்றி தயாரித்த அறிக்கையும், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ந-11)

## அதிகார...

பகிர்வு குறித்த தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நீதிமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் காரணமாகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டனவா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-11)

## கிணற்றி...

கிணற்றுக்குள் போட்டுள்ளான்.

இதன்போது கயிறு சிறுவனின் காலில் சிக்குண்டதால் சிறுவன் கிணற்றுக்குள் தூக்கி வீசப்பட்டு நீரினுள் மூழ்கியுள்ளான்.

இதனை அவதானித்த அயல்வீட்டார் கிணற்றுனுள் வீழ்ந்த சிறுவனை மீட்க போராடிய போதும் அச்சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-4)

## மீள்குடியேற்...

களை அவசரஅவசரமாக மீள்குடியேற்றியமையானது, ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களுக்கு எதிரான விடமாகும்.

அத்துடன் இலங்கையில் இடம்பெறும் மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராயும் நோக்கில் ஐ.நாவின் உள்ளக இடம்பெயர்ந்தோர் தொடர்பிலான விசேடபிரதிநிதி இலங்கை செல்லவுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)

## யாழிலிருந்து தென்...

நோக்கி இருலொறிகள் ஒரே நேரத்தில் பயணித்துள்ளன.

இவ்வாறு பயணித்த பேருந்துகள் ஓமந்தை பொலிஸ்நிலையத்தில் வழிமறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே இரு லொறிகளுக்கும் உள் கோடிக்கணக்கிலான பெறுமதிடைய இரும்புப் பொருட்கள் மறைக்கப்பட்டு இருந்துள்ளதை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.உடனடியாக இரு சாரதிகளையும்கைது செய்த பொலிஸார் இரும்புகளினையும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சாரதி சுன்னாகத்தினை சேர்ந்தவர் என்றும் மற்றையவர் கிளிநொச்சினை சேர்ந்தவரென்றும் யாழ்மாவட்ட பிரதிபொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு கடத்தப்பட்ட வாகன இயந்திரங்கள் போரின்போது சேதமடைந்த பொதுமக்களின் உடையதாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. அத்தோடு இராணுவத்தினர் நிறைந்துள்ள இப்பகுதியில் எவ்வாறு இவர்களால் இரும்பு கடத்தமுடிகின்றது எனவும் பொதுமக்களினால் கேள்வியெழுப்பப்படுகின்றது. (ந-4)

## 13ஆம் திருத்...

இந்தப் போராட்டங்களினால் மக்களின் கவனத்தை திசை திருப்ப ஆளும் கட்சி முயற்சிக்கின்றது.நாட்டின் பிரச்சினைகளிற்கு 13-ம் திருத்தச் சட்டமே காரணம் என சிலர் குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் மக்களின் அநேக பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் இயலாமையே காரணமாகும். வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்ட முடியாத காரணத்தினால் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது.

நாட்டின் அரசியல் சாசனத்துடன் விளையாடுவது எதிர்காலத்தை பாதிக்கும் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். (ந-11)

## முள்ளிவாய்...

பிறிதொரு பகுதியில் ரீ-56 ரக துப்பாக்கி 7, ஆர்.பீ.ஜீ ரவைகள் 11, ஆர்.பீ.ஜீ சாச்சர் 03, 12.7 ரவைகள் 122, 40 மில்லிமீற்றர் ரவைகள் 17 என்பன மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 24-ம் திகதி முள்ளிவாய்க்கால் கப்பல் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 12 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dubai நாட்டில்**
**உடனடி வேலைவாய்ப்பு**

அதி உயர் சம்பளம் (சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்)

கீழ்க் காணும் வேலைவாய்ப்புகள் உடனடியாக காத் திருக்கின்றன.

I. எலக்ரீசியன் (Electrician)
II. பிளம்பர் (Plumber)
III. காப்பென்ரர் (Carpenter)
IV. மேசன் (Mason)

இரண்டே வாரத்தில் பயணமாகலாம்
உடன் தொடர்பு கொள்ளவும்

**Lanka Voice**
24, Station Road, Vavuniya.
0750650084

(C-1315)

# நோர்வேயில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக மோசடி

## நோர்வே தூதரகம் எச்சரிக்கை

(கொழும்பு)

நோர்வேயில் வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கு விஸா விண்ணப்பங்கள் தொடர்பில் உதவி வழங்குவதாகக் கூறி பணம் வசூலிக்கும் முகவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நோர்வேயில் வேலைவாய்ப்பை பெறுவது தொடர்பில் இந்த முகவர்களில் பலர் தவறான தகவல்களை வழங்கி வருகின்றனர் என்று தூதகரகத்தின பிரதித்தலைவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே கிடைத்துள்ள ஏராளமான விண்ணப்பங்களை பரிசீலிக்க வேண்டியுள்ளதால் தற்போதைக்கு வேலை அனுமதி விண்ணப்பப்பத் திரங்களை வழங்குவதை நிறுத்தியுள்ளதாக நோர்வே தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

விஸா தொடர்பான புதிய தகவல்களை பெறுவதற்கு தூதரகத்தின் இணையத்தளமான www.norway.lk க்கு விஜயம் செய்யுமாறும், ஏனைய விஸா விண்ணப்பங்களை உலக வர்த்தக மையத்திலுள்ள Norway VFS Srilanka வில் ஒப்படைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் முற்பகல் 11 மணி, மதியம் 12 மணிக்கு இடையில் 011-3168865, 3168866 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக விஸா தொடர்பான சகல தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

**விற்பனைக்கு**

பொடியுடன் கூடிய மகேந்திரா மச்சிறக் விற்பனைக் குண்டு.

**0217201296**

(839)

யாழ்.நகரில்......
**Diploma in Mass Media**
அறிவிப்பாளர் பயிற்சி



வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகின்றீர்களா!

இதோ......

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலைசிறந்த அறிவிப்பாளர்களாக உருவாக்கி வரும் வவுனியா Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ். மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சிநெறி

(Diploma in Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத் தயாரிப்பு, நேரடி வர்ணனை செய்தி வாசிப்பு பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்புமிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக, ஊடகவியலாளராக வேண்டுமா?...

தயாராகுங்கள்
பதிவுகளுக்கு விரையுங்கள்.

வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College,
No:26,Station Road,
Vavuniya.
T.P.No:0770584658

குறிப்பு: எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச தனியார், வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளர்களாக கடமையாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாணவர்கள்
IISEEES NALLUR CAMPUS
No. : 762 Point Pedro Road,
Nallur, Jaffna.
T.P.No:0770584658 / 0212224728

(அ-1363)

FRENCH LANGUAGE CENTRE

FRENCH CLASSES – பிரெஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்திலான French வகுப்புக்களை மேற்கொள்ளும் ஒரே ஒரு நிறுவனம்.

France, Canada, Belgium செல்லவுள்ளோர், மாணவர்கள் மற்றும் French கற்க ஆர்வம் உள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்..

குறுகிய காலத்தில் சர்வதேச தரத்திலான சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 0779 789 456

No.07, Palaly Road, Jaffna.
(ஆரியகுளத்திற்கு அண்மையில்)

நெல்லியடி M.M.V வீதி.
நெல்லியடி.

Germen, Swiss (Deutsch) வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(834)

**Spoken English**

பாடசாலை மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புகள். Cambridge மற்றும் British Council இனால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப் படும். தரம் 6 முதல் 12 வரை

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
0212224728 / 0777444225

(சி-1394)

**Band Score 6.0**

IELTS பரீட்சைக்கான தயார்படுத்தல்கள் செயன் முறைப் பரீட்சை மற்றும் பாட விதானத்தை உள்ளடக்கிய முறையில் தயாரிக் கப்பட்ட தனித்துவமான பாடவிதானம்.

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
0212224728 / 0777444225

(சி-1395)



"மெகா ரியூணர்சின்" நெறிப்படுத்தலில்
"கிருபா லேணர்ஸ்" நடாத்தும்
**2012 சுப்பர் சிங்கர் வடமாகாணம்**
(Jaffna)

ரிக்கட்டுக்களை கிருபா லேணர்ஸின் கிளைகளிலும் மற்றும் Lovers Corner இலும் பெற்றுக்கொள்ளலாம்

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
திகதி : 28. 10. 2012
நேரம் : மாலை 4.00 மணி

நிகழ்ச்சித்தொகுப்பு:
M. மோகன்ராஜ்

இறுதிக்கட்ட சுற்றுக்காக இந்திய இசையமைப்பாளர் மன்மதராசா புகழ் இசை அரசன் தினா அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்



பிரதான அனுசரணை

Lovers Corner
No.164. Ramanathan Road.
Jaffna. 021 221 9499
Branch:
50, Point Pedro Road,
Nallur, Jaffna.

City Travels Transport Service
COLOMBO TO JAFFNA/ JAFFNA TO COLOMBO
Maiin Street, Shangarathai
Paranthi: 077 9080435 Thevan: 077 4669641
021 321...

இணை அனுசரணை

MIDEA ELECTRO MART
No1-1,1-H, 1j, Stanley Road,
Jaffna, Sri Lanka.
021 222 4566, 021 222 1646

PARANI CREAM HOUSE
K.K.S Road, Kokkuvil Junction,
Kokkuvil.
077 918 6284

GREEN GRASS Hottel & Restaurant
No: 32, Aseervatham Lane,
Hospital Road, Jaffna.
021 222 4835, 021 222 1686

MUTHUMARY AMMAN Timber
Deport & Funiture Sale
No: 1170, Manipay Road,
Kaithadi South, Kaithadi.
021 373 7722, 077 458 2155

அச்சு அனுசரணை:
JEYASRI Printers: நீராவியடி, யாழ்ப்பாணம்.
021 221 9129



இறுதியில் தினாவின் இசை நிகழ்ச்சி இடம்பெறும்
இசை: T.S. நாதனின் "மெகா ரியூணர்ஸ்"

(C-1381)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.